Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



24 MAY 2004



புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது • பாதுகாப்பானது • நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM. NET

T.P: 021-222 7310, 021-222 7555, 021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 04 (24.05.2004) திங்கட்கிழமை இதழ்:235


# பேச்சுக்கான இடம், திகதியை தீர்மானிக்க சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்!



(கொழும்பு)

**அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை அயர்லாந்து, தென்னாபிரிக்கா அல்லது இத்தாலி நாட்டில் நடத்தலாம் என விடுதலைப் புலிகள் ஆலோசனை கூறியிருக்கும் நிலையில் - இன்று கொழும்புவரும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - பேச்சு நடத்துவதற்கான இடம் மற்றும் திகதிகளை இரு தரப்புடனும் பேசி இறுதி முடிவு எடுப்பார் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

கொழும்புவரும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் இன்று முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்.

பின்னர் நாளை மறுநாள் கிளிநொச்சிக்கு செல்லும் எரிக் சொல்ஹெய்ம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இரு தரப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்தி இதுவரை இணக்கப்பாடு காணப்படாத விடயங்கள் குறித்து இணக்கம் கண்டதும் - சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான இடம் மற்றும் திகதியை இறுதிசெய்யும் முயற்சியில் ஈடுபடுவார் என்று தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் ஏற்கனவே சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு 3 வெளிநாடுகளை சிபார்சு செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அயர்லாந்து, தென்னாபிரிக்கா மற்றும் இத்தாலி ஆகிய மூன்று நாடுகளின் பெயர்களே விடுதலைப் புலிகளால் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் இந்த நாடுகளில் பேச்சுவார்த்தையை நடத்துவது குறித்து இனிமேல்தான் முடிவெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் குழுவுக்கு சட்டத்தரணி வி.உருத்திரகுமாரன் தலைமை தாங்கவுள்ளதாகவும், அரச


(12ஆம் பக்கம் பார்க்க)


## சமாதான முயற்சிகளில் நோர்வே ஈடுபடக்கூடாது!

### ஜனாதிபதியிடம் ஜே.வி.பி வற்புறுத்து

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கம் பங்கேற்கக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஜே.வி.பி வற்புறுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவுடன் இடம்பெற்ற தொலைபேசிஊடான பேச்சுக்களின்போதே ஜே.வி.பி தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தியாவில் புதிதாகப் பதவியேற்றிருக்கும் காங்கிரஸ் அரசாங்கத்தை சமாதான


(12ஆம் பக்கம் பார்க்க)


## கிழக்கு மாகாண தாக்குதல்கள்; கண்காணிப்புக்குழு அறிக்கை!

### விரைவில் வெளியாகும்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விரைவில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிடுவதற்கான தரவுகளைச் சேகரித்து விசாரணைகளை நடத்தும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருவதாகவும், மிகவிரைவில் இந்த விபரங்கள் அடங்கிய அறிக்கை வெளிவரும் என்றும் போர்நிறுத்தக் கண்கா்ணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை வாகரை - ஆலங்கேணிப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க போராளி மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் துப்பாக்கிச் சன்னங்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## இலங்கைக் கடற்பரப்பில் அமெரிக்கா விசேட பயிற்சி!

## இராணுவத்துக்குப் பயிற்சி; இந்திய அதிகாரிகள் வருகை!

# இலங்கைக் கடற்பரப்பில் அமெரிக்கா விசேட பயிற்சி!

## இந்த மாதம் நடைபெறவுள்ளது

அமெரிக்கப் படையினர் இலங்கை கடற்பரப்பில், விசேட பயிற்சி நடவடிக்கை ஒன்றை இந்த மாதம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

தென்னாசிய அமைதி காப்புத் திட்டத்தின் அடிப்படையில் பலநோக்கு பிளட்டுன் பயிற்சித்திட்டம் (எம்.பி.ஈ) என்ற இந்த விசேட பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நடவடிக்கை கொழும்பிலிருந்து 60 மைல் தொலைவில் இடம்பெறவுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த இடம் பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இரண்டு மாத காலம் நீடிக்கவிருக்கும் இந்தப் பயிற்சி நடவடிக்கையில் - இலங்கை, பங்களாதேஷ், மொங்கோலியா, நேபாளம், இந்தியா ஆகிய நாடுகளின் படையினருடன் அமெரிக்கப் படையினர் விசேட பயிற்சியினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இந்தப் பயிற்சியில் பாகிஸ்தான் பங்கேற்காது எனத் தெரியவருகிறது.

இந்தப் பயிற்சி நடவடிக்கைக்கு அமைவாக இராணுவத்திலிருந்து இரண்டு பிளட்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்குப் பயிற்சி; இந்திய அதிகாரிகள் வருகை!

## கொழும்புத் தகவல் தெரிவிப்பு

இராணுவத்துக்குப் பயிற்சியளிப்பதற்காக பெருமளவு இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கை வந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிடுகையில் -

இராணுவத்துக்குப் பயிற்சியளிக்க இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கை வந்திருப்பதுடன், இராணுவத்துக்கான பெருமளவு ஆயுதங்களும் தருவிக்கப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் இதேவேளை, இராணுவத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்கும்போது, அவர்களின் போரியல் தரத்துக்கு ஏற்றவகையில் தமது படைத்தரப்பையும் வைத்திருக்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பயன்படுத்திக் கொண்டு இந்தியாவும்,சில அதிகாரிகளை - இலங்கைப் படையினருக்குப் பயிற்சியளிக்க அனுப்பிவைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை மீனவர்களுடன் பேச்சுநடத்த தமிழக மீனவர் குழு கொழும்பு வந்தது!

இலங்கை சிறைச்சாலைகளில் வாழும் இந்திய மீனவர்களை விடுவிப்பதற்காக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் கொண்ட குழுவொன்று நேற்றுக் கொழும்புக்கு வந்தது.

இந்திய மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டே இக்குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை மீனவர்களுடனான சந்திப்பிற்காகவும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும், இலங்கை மீனவர்களால் இந்திய மீனவர்கள் கடத்தப்படுவது குறித்தும் ஆராயவே இவர்கள் இலங்கை வந்துள்ளதா

(12ஆம் பக்கம் பார்க்க)

பதிப்புலக வேந்தர்களே!



PCC COLOUR DIGITAL PRINTER

நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.



- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# மத்திய அமைச்சுக்களை ஒதுக்குவதில் சிக்கல்; பிரதமர் மன்மோகன்சிங் தலையீட்டால் சமரசம்!

(சென்னை)

மன்மோகன்சிங் தலைமையில் புதிய அமைச்சரவை நேற்று முன் தினம் பதவி ஏற்றது. இதில், 68 பேர் இடம்பெற்றுள்ளனர். 29 பேர் இராஜாங்க அமைச்சர்களாகப் பதவி ஏற்றனர்.

பிரதமர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட மன்மோகன்சிங் உடனடியாகத் தனது பணியை ஆரம்பித்தார். தெற்கு பிளாக்கில் உள்ள பிரதமர் அலுவலகத்துக்குச் சென்ற பிரதமரை, தலைமை பொருளாதார ஆலோசகர் எஸ்.நாராயணன் மற்றும் மூத்த அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர், பிரதமர் மன்மோகன்சிங் அலுவலக பணியை மேற்கொண்டார். அமைச்சரவைச் செயலாளர் கமல்பாண்டே, வெளியுறவுச் செயலாளர் ஷாகங் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

நேற்றுக்காலை மன்மோகன்சிங் டெல்கியில் உள்ள தலைவர்கள் சமாதிகளுக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

முதலில் ராஜ்கோட்டில் உள்ள மகாத்மா காந்தி சமாதிக்குச் சென்றார். பின்னர், நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, லால்பகதூர் சாஸ்திரி சமாதிகளில் அஞ்சலி செலுத்தினார்.

இறுதியில், இந்தியா கோட்டில் உள்ள மறைந்த இராணுவ வீரர்கள் நினைவுச் சின்னத்திற்கு மரியாதை செலுத்தினார். அவருடன் மனைவி குர்சரன்கவுர், டெல்கி முதல்வர்-மந்திரி ஷீலா தீட்சித் ஆகியோர் சென்றிருந்தனர்.

இதற்கிடையே - நேற்றுக்காலை அமைச்சரவை ஒதுக்கீடு விபரம் வெளியிடப்படும் என்று அறி விக்கப் பட்டு இருந்தது. ஆனால், அமைச்சரவை ஒதுக்கீட்டில் திடீர் சிக்கல் ஏற்பட்டது.

சுகாதாரத்துறையை முதலில் டாக்டர் அன்புமணிக்கு ஒதுக்கி இருந்தனர். ஆனால், அந்த அமைச்சை வி.பி.சிங்கின் முயற்சி காரணமாக ராம் விலாஸ் பஸ்வானுக்கு கொடுத்து விட்டார்களாம்.

அதற்குப் பதிலாக, டாக்டர் அன்புமணிக்குச் சுற்றுலா அமைச்சைக் கொடுப்பதாக காங்கிரஸ் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், இது பா.ம.க தரப்பால் ஏற்கப்படவில்லை. இதனால், அன்பு மணிக்கு ஒதுக்கப்படும் அமைச்சரவையில் சிக்கல் நீடிக்கிறது.

இந்தநிலையில், தி.மு.க அமைச்சர் ஏ.ராஜா தனக்கு வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு வேண்டாம் எனவும், சுகாதார அமைச்சே வேண்டுமெனக் கேட்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதுபோல், வேறு சிலரின் அமைச்சு ஒதுக்கீட்டிலும் சிக்கல் நிலவுகிறது. இதனால், நேற்று மதியம்வரை மத்திய அமைச்சர்களின் அமைச்சு ஒதுக்கீடு விபரம் அறிவிக்கப்படவில்லை.

சிக்கலைத் தீர்க்கப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக லோக் ஜனசக்தி கட்சி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் நேற்றுக்காலை தன் குடும்பத்தினருடன் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

பின்னர், வெளியில் வந்த அவர் நிருபர்களிடம் கூறுகையில், 'எல்லா பிரச்சினையும் தீர்க்கப்பட்டுவிட்டது. அமைச்சு ஒதுக்கீட்டில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. எந்த அமைசைக் கொடுத்தாலும் என்னால் பணியாற்ற முடியும்' என்றார்.

அவருக்கு சுகாதாரம் அல்லது இரசாயனம் மற்றும் உர அமைச்சு கிடைக்கும் என்று தெரிகிறது.

நேற்று மாலை 4 மணிக்கு பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் மத்திய அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்றது. மத்திய அமைச்சர்கள் 67 பேரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதிதாக அமைந்துள்ள 14 ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தை எப்போது கூட்டுவது என்பது குறித்து கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

அனேகமாக நாடாளுமன்றக்



கூட்டம் 31 ஆம் திகதி கூடும் எனக் கூறப்படுகிறது.

# ம.தி.மு.க தலைவர் கணேசனுக்கு துணை சபாநாயகர் பதவி!



மத்தியில் அமைந்துள்ள காங்கிரஸ் கூட்டணி அமைச்சரவையில் அனைத்து கூட்டணி கட்சிகளும் இடம் பெறவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி விருப்பம் தெரிவித்தார்.

ஆனால், ம.தி.மு.க அமைச்சரவையில் இடம்பெறப் போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தது. எனவே, அந்தக் கட்சிக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் நாடாளுமன்ற சபாநாயகர் பதவியை அளிக்க காங்கிரஸ் முடிவுசெய்துள்ளது.

காங்கிரஸ் வேண்டுகோளை ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ம.தி.மு.கவில் மொத்தம் 4 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களில் ம.தி.மு.க அவைத்தலைவரும், திருச்சிதொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவருமான எல்.கணேசனுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்கப் படும்.

நாடாளுமன்ற சபாநாயகர் பதவி, இந்திய கம்யூனிஸ்ட்டுக்கு வழங்க காங்கிரஸ் முடிவுசெய்துள்ளது. அந்தக்கட்சியின் மூத்த தலைவரான சோம்நாத் சட்டர்ஜி பதவியை ஏற்கும்படி காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே, அமைச்சரவையில் இடம்பெறமாட்டோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் அறிவித்துள்ளது. இந்தநிலையில், சபாநாயகர் பதவியை ஏற்பதா என்பதுபற்றி முடிவுசெய்ய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ கூட்டம் நேற்று டெல்கியில் நடைபெற்றது.

## பொடா சட்டத்தை நீக்கும் காங்கிரஸ் கட்சியின் முடிவு வாபஸ் பெறப்படவேண்டும்!

### வெங்கையா நாயுடு பேட்டி



பொடா சட்டத்தை வாபஸ் பெறுவது என்ற முடிவிலிருந்து காங்கிரஸ்கட்சி வாபஸ்பெறவேண்டுமென, பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வெங்கையாநாயுடு கோரிக்கை விடுத்தார்.

நேற்றுக்காலை ஹைதராபாத் செலலும் வழியில் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி - காங்கிரஸ் தலைமையில் அமைந்துள்ள ஆட்சி பற்றி உஙகள் கருத்து என்ன?

பதில்- காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களால் நிராகரிக்கப்பட்ட பலர் மத்திய அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் விவகாரங்களை புதிய அரசு நன்கு சமாளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை பொறுத்து இருந்து பார்க்கலாம்.

அவர்கள் இப்போதுதான் ஆட்சியமைத்து இருக்கிறார்கள். நாங்கள் கூர்ந்து கவனிப்போம். பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக, ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக நாங்கள் இருப்போம்.

கேள்வி - கம்யூனிஸ்ட்கள் ஆதரவுடன் காங்கிரஸ் 5 ஆண்டு ஆட்சியைக் நீடிக்கமுடியுமா?

இப்போதைக்கு அதுபற்றி நாங்கள் எதுவும் சொல்லவிரும்பவில்லை. முதலில் குறைந்தபட்ச பொது செயற்திட்டம் வரட்டும். அதன்பிறகு நாங்கள் கருத்துத்தெரிவிப்போம்.

கேள்வி- பொடா சட்டம் வாபஸ் பெறப்படும் என்று அறிவித்திருக்கிறார்களே?

பதில் - நாடு முழுவதும் தீவிரவாதம் இருக்கிறது. பல இடங்களில் அது தலைதூக்கி உள்ளது.

நாட்டு நலனுக்காகத்தான் பொடா சட்டம் கொண்டுவரப்பட்டது. சில மாநில அரசுகள் அதைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம். சில மாநில அரசுகள் அதை சரிவரப் பயன்படுத்தாமல் விட்டிருக்கலாம்.

அதற்காக பொடாவை நீக்க வேண்டும் என்பது சரியல்ல. ஒரு பொலிஸ் அதிகாரி சட்டத்தை தவறாகப் பயன்படுத்தினால் நாம் அந்த சட்டத்தை வாபஸ் பெறமுடியாது.

எனவே, பொடா சட்டம் தவறாக பயன்படுத்துவதை தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.


## கரம்பொன் அன்னை வேளாங்கன்னி ஆலயப் பெருவிழா



பக்தர்களே!

அன்னையின் 29ஆவது வருட திருவிழா 25.05.2004 மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும். 29 ஆம் திகதி மாலை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் 30 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

வேளாங்கன்னித் தாயின் பக்தர்களே கொடூர இடம்பெயர்வுகளால் சிதறுண்டு இருக்கும் எங்களுக்கு அன்னையின் பரிந்துரை குறைவின்றிக் கிடைக்கும்படியாக திருவிழா நிகழ்வுகளில் கலந்து செபிக்க அன்போடு அழைக்கின்றோம்.

தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
உதவிகள் செய்ய விரும்புவோர் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்

பங்குத்தந்தையும்
பங்கு மக்களும்

விளம்பர அனுசரணை
ACD Jaffna

(சி/2544)

## பெயர் மாற்றம்

கொயிலாமனை, கொடிகாமத்தில் வசிக்கும் *சிவஞானம் நாஜேந்தினி* ஆகிய நான் 22.05.2004ம் திகதியில் இருந்து எனது பெயரை

**சிவஞானம் றயந்தினி**

என மாற்றம் செய்கின்றேன். இதனை இலங்கை ஜனநாயக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

*(736)*

**நிறஞ்சனாஸ்** சங்கானை

பிரபு, குஷ்பு, நெப்போலியன் நடித்த

**மறவன்**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)

**SLIVER**

(சி-2386)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த

**ஆய்த எழுத்து**



(சி-2387)

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

5 ஆவது வெற்றிவாரத்தை நோக்கி

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக

டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த

**அருள்**



(சி-2397) (றீல்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி

26.05.2004 முதல் **எதிரி**

# ஹக்கீமுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கவில்லையாம்!

## ஜனாதிபதி செயலகம் கூறுகிறது



(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் பெண் ஒருவரை தொடர்பு படுததி அவரை அவமதித்த சம்பவததுடன், ஜனாதிபதிக்கு எந்த வித தொடர்பும் இல்லை என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச சருமான ரவூப் ஹக்கீம், பெண் ஒருவருடன் தொடர்பு படுத்தப் பட்டதாகக் கூறப்படும் சம்பவத்திற்கும், ஜனாதிபதிக்கும் தொடர்பிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகம் இந்த அறிக்கையை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

லசந்த விக்கிரமதுங்க தனது சொந்தப் பத்திரிகையிலும், மகாராஜா நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைக்காட்சியிலும் ஹக்கீமையும், குமாரி கூரே என்ற பெண்ணையும் தொடர்புபடுத்தி வெளியிடப்பட்ட செய்தியில் ஜனாதிபதிக்கும் தொடர்பிருப்பதாக செய்தி வெளியிடப்பட்டது-.

இந்த ஊடகங்களில் வெளியான செய்திக்கும், ஜனாதிபதிக்கும் எந்தத்தொடர்பும் இல்லை என்றும் ஜனாதிபதி, குமாரி கூரே என்ற பெண்ணை ஒருபோதும் சந்திக்கவில்லை எனவும, ஜனாதிபதி தெரிவித்ததாக ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



லசந்த விக்கிரமதுங்க வழமையாகவே ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை வெளியிடுபவர் என குறிப்பிட்ட ஜனாதிபதி செயலகம், இந்தச் செய்தியை பெரிய விடயமாக கருதவேண்டியதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசைப் பொறுப்பேற்ற காலத்தில் இருந்தே ஜனாதிபதிக்கெதிரான செய்திகளை லசந்த விக்கிரமதுங்க வெளியிட்டுவந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சில அமைச்சர்களையும் தொடர்புபடுத்தி செய்தி வெளியிடப்பட்டபோதிலும் அந்த அமைச்சர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தச் செய்தி குறித்து முழுமையான, நியாயமானதுமான விசாரணையை விரைவாக நடத்துமாறு பொலிஸாருக்கு ஜனாதிபதி பணித்ததுடன் இதுகுறித்து சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கு மன்னாரில் மாநாடு!

(மன்னார்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பது குறித்து, மன்னாரில் மகளிர் அமைப்புக்களின் மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை காஞ்சிரம் கிராம அபிவிருத்தி மன்றத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வு - மாதர் அபிவிருத்தி மன்றங்களின் மாவட்ட இணைப்பாளர் செல்வி அரியரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து மகளிர் மன்றங்களின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வின் இறுதியில் மகளிரின் ஒழுக்கமுறைகளைச் சித்திரிக்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. (201)

## மாகாணசபைத் தேர்தலில் ஹெல உறுமய போட்டியிடாது

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள- தென், மேற்கு, சப்ரகமுவ, ஊவா, மத்திய, வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலிலேயே போட்டியிடுவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தீமானித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முனணி மற்றும் ஐ.தே.க உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் தமது வேட்புமனுக்களை கையளிக்க ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## 3196 பொலிஸாருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி 'பச்சைக்கொடி'

மூவாயிரத்து 196 பொலிஸாருக்கு பதவியுயர்வுகளை வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பச்சைக்கொடி காட்டியிருக்கிறார்.

பொலிஸ் சார்ஜன்ட்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் தரங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் அரசு பதவியுயர்வுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் மா அதிபர் இந்தப் பதவியுயர்வுகளை வழங்குவதற்கு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருக்கிறது.

பொலிஸாருக்கான பதவியுயர்வுகள் எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து வழங்க ஆரம்பிக்கப்படும் என்று பொதுப் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் , உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகிய பதவியுயர்வுகளை வழங்குவதற்கு 579 அதிகாரிகளுக்கு ஏற்கனவே தேசிய பொலிஸ் ஆணைக்குழு நேர்முகப் பரீட்சைகளை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## காணிகளை கொள்வனவு செய்ய வெளிநாட்டவர்களுக்கு தடை!

### விரைவில் சட்டம் வருகிறது

(கொழும்பு)

நாட்டின் கரையோரப் பகுதியிலுள்ள பழமை வாய்ந்த கட்டடங்கள் மற்றும் காணிகளை வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்வதைத் தடை செய்வதற்கு காணி அமைச்சு நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது.

இது தொடர்பாக காணி அமைச்சு வட்டாரங்கள் கருத்து வெளியிடுகையில் -

நாட்டின் தென்பகுதி கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் எதிர்ப்புக் காரணமாகவே காணி அமைச்சு இந்த நடவடிக்கையை எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருப்பதுடன், இது தொடர்பாக அவர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றுக்கு பிரதமர் அழைப்பு விடுத்திருந்தபோதும், காணி அமைச்சர் வெளிநாடு சென்றிருந்தமையால் அவர் இந்தக் கூட்டத்திற்குச் சமூகமளிக்கமுடியவில்லை.

இதேவேளை நீதிச் சட்டங்களின் பிரகாரம் 100 வீதமான வரியுடன் வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளைக் கொள்வனவு செய்யமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கணினிப்பயிற்சி வகுப்பு

(உடுவில்)

வலி வடக்கு பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடாததப்பட்டுவரும் கணினிப் பயிற்சி வகுப்புக்கள் முடிவடைந்துள்ளது.

இதன் அடுத்த பிரிவின் ஆரம்பம் ஜூன் மாதம் தொடங்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (101)

# வெளவால்களின் கூடாரமாகும் யாழ்.புதிய பிரதம தபாலக கட்டடம்!

## எப்போது திறக்கப்படுமென மக்கள் அங்கலாய்ப்பு

யாழ்.நகரில் வீரசிங்கம் மண்டபத்திற்குச் சமீபமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்.பிரதம தபாலகத்தின் புதிய கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து நான்கு மாதமாகியும், இதுவரை திறந்துவைக்கப்படவில்லை. இதனால் பிரதம தபாலகம் தனியார் கட்டடத்தில் வாடகை கொடுத்தே தொடர்ந்தும் இயங்கிவருகின்றது.

கடந்த போர்க்கால அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்த யாழ்.பிரதம தபாலகம், போர்நிறுத்த உடன்பாடிக்கைகளின் பின்னர் மீண்டும் நவீன வசதிகளுடன் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டன என்றும், இதனை திறந்துவைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு, கொழும்பிலுள்ள அஞ்சல் அதிபர் நாயகத்திற்கும், அமைச்சு அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த தபாலகத்தைத் திறப்பது குறித்து அவர்களின் முடிவு எதுவும் இதுவரை யாழ்.பிரதம தபாலகத்திற்கு அறிவிக்கப்படவில்லை. கடந்த பல வருடமாக யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் போதிய இடவசதிகள் இன்றி, காற்றோட்டம் இன்றி பிரதம தபாலகம் இயங்கிவருகின்றது.

இதன் காரணத்தினால் கட்டட வேலைகள் பூர்த்தியாகியும், யாழ்.பிரதம தபாலக கட்டடம் வெளவால்களின் கூடாரமாக காணப்படுவதையிட்டு மக்கள் விசனமடைந்துள்ளனர். (தீ)

புதிய தபாலகத்தின் எழில்மிகு தோற்றம்



# இராணுவ புலனாய்வாளர்கள் கொலை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துக!

## ஜாதிக ஹெல உறுமய சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக அதிகார யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ள அதே வேளை -

இராணுவப் புலனாய்வுத்துறையினர் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டுவருவது தொடர்பாக நாடாளுமன்ற விவாதம் ஒன்றை நடத்த சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் - ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்திருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

கிழக்கிலும், தென்பகுதியிலும் சிங்கள இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாகச் சுட்டுக்கொல்லப்படுவதையிட்டு ஜாதிக ஹெல உறுமய சீற்றமுற்றிருப்பதாகவும் -

முன்னர் தமிழ் புலனாய்வாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடததிய புலிகள், இப்போது சிங்கள அதிகாரிகள் மீது தமது தாக்குதல்களைத் திருப்பிவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனாலேயே தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இந்தச் சம்பவங்கள் குறித்து, நாடாளுமன்ற விவாதம் ஒன்றுக்கு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டவரைபு குறித்த விவாதம ஒன்றுக்கு நேரம் ஒதுக்கித்தருமாறும், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் இந்தத் தீர்வுத்திட்டத்தை முற்றாக எதிர்ப்பதாகவும், இலங்கையிலேயே பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்த திலக் கருணாரத்ன -

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்கள் நடத்தப்படக்கூடாது, அது நாட்டைப்பிரிக்கும் ஒரு திட்டம். எனவே இதுகுறித்து அவசரமாக ஒரு விவாதம் நடத்தப்படவேண்டும் என, நாடாளுமன்றத்தில் தமது கட்சிப் பிக்குகள் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்செய்யுமாறு கோரிக்கை!

இலங்கையில் மீண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்செய்ய வேண்டுமென பொலிஸ இன்ஸ்பெக்டர்கள் சங்கம் - பொலிஸ மா அதிபரிடம் கேட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு தற்சமயம் அமுலில் உள்ளது. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் - பொலிஸார் மீதும், புலனாய்வுப் பிரிவினர் மீதும் தாக்குதல்களை நடத்தி வருவதால் அதனைத் தடுப்பதற்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்செய்யப்படுவது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோருக்கும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் மனுக்களை அனுப்பியுள்ளது.

## இலங்கை அணியினது

# அவுஸ்ரேலிய பயணத்தின் போது முரளிதரன் இடம்பெறவேண்டும்

## ஷேன் வோன் தெரிவிப்பு



(சிட்னி)

அவுஸ்ரேலிய பயணத்தின்போது, இலங்கை அணியில் முரளிதரன் இடம்பெற வேண்டும் என்று ஷேன் வோன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஷேன் வோன். டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை சாதித்தவர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்திலுள்ளார். அவர் இதுவரை 517 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

அவுஸ்ரேலிய - சிம்பாப்வே இடையே 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வோன் அவுஸ்ரேலியா திரும்பினார். இந்தத் தொடர் நடந்திருந்தால் முரளிதரனின் சாதனையை (527 விக்கெட்டுக்கள்) பெரும்பாலும் வோன் முறியடித்திருப்பார்.

தூஸ்ரா வகை பந்துவீச்சு பிரச்சினையில் சிக்கியுள்ள முரளிதரன் அவுஸ்ரேலிய பயணத்தை புறக்கணிப்பேன் என்று ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவுஸ்ரேலியாவுடன் யூலை மாதம் நடக்கவிருக்கும் போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை அணியில் முரளிதரன் இடம் பிடிக்கவேண்டும் என்று வோன் விருப்பம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது -

அவுஸ்ரேலிய பயணத்தின்போது, முரளிதரன் கலந்துகொள்ளவேண்டும். மாறாக இந்தப் பயணத்தை அவர் புறக்கணிக்கக் கூடாது. அவுஸ்ரேலிய ரசிகர்கள் முரளிதரனின் பந்துவச்சை மிகவும் எதிர்பார்த்துள்ளனர். 900 விக்கெட்டுக்களை வீழ்த்தக்கூடிய தோள் வலிமையுடன் முரளிதரன் உள்ளார்.

தற்போது அவர் மீது எழுந்துள்ள புகாருக்கு முரளிதரன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இவ்வாறு ஷேன் வோன் கூறினார்.

## சர்வதேச தடகள வரிசை இந்திய வீராங்கனை 4 ஆவது இடத்தில்



சர்வதேச தடகள சங்கம் வீராங்கனைகளின் வரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்படி இந்திய வீராங்கனையான அஞ்சு ஜோர்ஜ் 1,242 புள்ளிகள் பெற்று 4 ஆவது இடத்திலுள்ளார்.

கட்டாரில் சமீபத்தில் நடந்த கிராண்ட் பிரீ போட்டியில் அவர் 6.82 மீட்டர் தூரம் தாண்டி சாதனை படைத்து தங்கப் பதக்கம் பெற்றார்.

இதன்மூலம் அஞ்சுஜோர்ஜ் 6 ஆவது இடத்திலிருந்து 4 ஆவது இட வரிசைக்கு முன்னேறியுள்ளார்.

ரஷ்ய வீராங்கனை கொடாவா 1,304 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலும், பார்பர் (பிரான்ஸ்) 2 ஆவது இடத்திலும், எல்வா (ஜேமைக்கா) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

## நியூஸிலாந்து அணியில் புதுமுக வீரருக்கு இடம்

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி ஜூன் 24 ஆம் திகதி இங்கிலாந்தில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு நாடும் மற்ற அணியுடன் தலா 3 முறை மோதவுள்ளன.

புள்ளிகள். அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும். இந்தப் போட்டிக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. புதுமுக வீரராக ஹோப்பின்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளர். இவர் விக்கெட்காப்பாளர் ஆவார். 3 நாடுகள் போட்டிக்கான நியூசிலாந்து அணி வருமாறு -

பிளமிங் (கப்டன்), ஆஸ்லே, கிறிஸ் ஹாரிஸ், கிறிஸ்கெய்ன்ஸ், மக்மிலன், ஹோப்சின்ஸ், மார்ஷல், மக்கலம், மைக்கல் பெப்ஸ், ஸ்ரைஸ் டைரிஸ், ஷேன் பொண்ட், மில்ஸ், ஜேக்கப் ஓரம், ர.ஃ.பி, வெட்டோரி ஆகியோர்.

## அக்தருக்கு ஆதரவாக இம்ரான்கான்

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது வழக்கு தொடர கோருகிறார்!

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்படும் இவரது பந்துவீச்சு இந்தியாவுக்கு எதிரான தொடரில் எடுபடவில்லை.

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் சொகைப் அக்தர் முழுமையாகப் பந்து வீசவில்லை. காயம் காரணமாக அவர் மிகக் குறைந்த ஓவர்களே வீசினார். ஆனால், அவரால் கொஞ்சம் சிறப்பாக துடுப்பாட்டம் செய்ய முடிந்தது. அக்தரின் காயம் குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டதால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்த முடிவுசெய்தது.

4 பேர்கொண்ட மருத்துவக்குழு, அக்தரிடம் அவரின் காயம் குறித்து விசாரணை நடத்தியது. இந்த விசாரணை அறிக்கையை மருத்துவக் குழு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பித்தது.

அதில் அக்தருக்கு காயம் ஏற்பட்டது. உண்மைதான் என்றும் தொடர்ந்தும் அவர் காயத்திலிருப்பதாகவும் தெரிவித்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது சொகைப் அக்தர் வழக்குத் தொடரவேண்டும் என்று இம்ரான்கான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -



சொகைப் அக்தரிடம் மருத்துவக் குழு விசாரணை நடத்தியதே தவறு என்று முன்பு கூறினார். இந்த விசாரணையில் அவருக்கு காயம் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

மருத்துவக்குழு விசாரணை நடத்தியதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை மீது சொகைப் அக்தர் மானநஷ்ட வழக்கு தொடரவேண்டும். வழக்குத் தொடருவதுதான் சரியான முடிவாகும் என இம்ரான் கான் கூறினார்.

# வலிமையற்ற சிம்பாப்வே அணியுடன் விளையாட விருப்பமில்லையாம்

## தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவிப்பு

(ஜோகன்ஸ்பேர்க்)

வலிமைகுறைந்த சிம்பாப்வே அணிக்கு எதிராக விளையாட விருப்பம் இல்லாத நிலையில் இருப்பதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு சிம்பாப்வே அணியுடன் விளையாடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒருங்கிணைந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் ரேமாலி கூறுகையில் -

அவுஸ்ரேலிய, சிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெறவிருந்த இரண்டு டெஸ்ட் போட்டிகள கொண்ட தொடர் ரத்தானதைத் தொடர்ந்து சிம்பாப்வே பயணம் பற்றி நாங்களும் யோசிக்க ஆரம்பித்துவிட்டோம். 2005 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரானது முற்றிலும் கடினமான தொடராக இருக்கும் என்பதை உறுதிசெய்ய எல்லா முயற்சிகளையும் எடுப்போம்.

வலுவில்லாத சிம்பாப்வே அணியுடன் விளையாட நாங்கள் விரும்பவில்லை. எனவே சிம்பாப்வே அணியை முதற்தர அணியாக மாற்றத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுப்போம். சிம்பாப்வே அணியின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் என்று கூறினார்.

தற்போது சிம்பாப்வே கிரிக்கெட்டில் இருக்கும் பிரச்சினையைத் தீர்க்க தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுக்கும் என்று மாலி தெரிவித்தார். சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க கடந்த சில வாரங்களாக தீவிர முயற்சிகளை எடுத்து வருவதாகவும் விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் மாலி மேலும் தெரிவித்தார்.

## பந்து வீச்சில்தான் எனது முழுக்கவனமும்

### பதான் தெரிவிப்பு



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இவரது பந்துவீச்சு நம்பமுடியாத அளவுக்கு பிரமாதமாக இருந்தது.

3 டெஸ்டில் அவர் 12 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். தற்போது, அவர் சென்னையில் உள்ள எம்.ஆர்.எப். பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வருகிறார். பந்து வீச்சுக்குதான் மிகுந்த முக்கியுத்துவம் கொடுப்பேன் என்று பதான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, சகல துறை ஆட்டக்காரனாக திகழ்வேன் என்று முன்பு கூறியிருந்தேன். தற்போது, எனது கவனம் முழுவதும் பந்து வீச்சில்தான் இருக்கும் என்றார். பாகிஸ்தான் தொடரில் பதான் சிறப்பாக துடுப்பாட்டமும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## வி.கே.ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட முடிவுகள்

வி.கே. ஆறுமுகம் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, நேற்று முன்தினம் இளைஞர் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சீ பிரிவுக்கான போட்டியில் விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

பீ பிரிவுக்கான போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் மோதி தலா ஒவ்வொரு கோலைப் பெற்றன. தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கும்போது, திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

சீ பரிவில் சிறந்த ஆட்ட நாயகனாக கரணவாய் மத்தி விளையாட்டுக்கழக வீரர் ஜோசப் தெரிவுசெய்யப்பட்டதுடன், பீ பிரிவில் சிறந்த ஆட்டநாயகனாக தணிகைவேளும் தெரிவுசெய்யப்பட்டனர்.(12)

## நான்கு கழகங்களுக்கிடையிலான 30 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட நான்கு விளையாட்டு கழகங்களிடையே லீக் முறையிலான 30 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் அணியுடன், யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு கழகம் என்பன இந்தச் சுற்றுப் போட்டிக்காக அழைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் முதல், பல்கலைக்கழக விளையாட்டு அவையால் நடாத்தப்பட்டுவரும் இந்தச் சுற்றுப்போட்டியில் நான்காம் இடத்தைப் பெறும் அணிஅடுத்தவருட சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை இழந்து, புதிய அணி சுற்றுப்போட்டிக்காக தெரிவுசெய்யப் படுகிறது.

அந்த வகையில் கடந்த வருடம் நான்காம் இடம்பெற்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் இந்த வருடம் கலந்துகொள்ளும் தகுதியை இழந்துள்ளது.

அந்த அணிக்குப் பதிலாக யாழ்.சென்ரலைட் விளையாட்டுக் கழகம் இந்தச் சுற்றுப்போட்டிக்காக அழைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியின் லீக் போட்டிகள் யூன் மாதம் 2ஆம், 5ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெற்று - இறுதிப் போட்டி யூன் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (58)

# அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் நெடுந்தீவு வர்த்தகர்கள்

நெடுந்தீவுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதற்கு வர்ததகர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுவருவதுடன், பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கப் படகுகள் திருத்தவேலை இடம்பெறுவதனால் பொருட்கள் கொண்டுவருவதில் பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது.

பல.நோ.கூ.சங்கக் கிளைகளுக்கான பொருட்கள், இலவச உலர் உணவு நிவாரணப் பொருட்கள் மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கான பொருட்கள், மரக்கறிகள் என்பவற்றினைத் தற்போது சேவையில் ஈடுபடும் படகுகளில் ஏற்றினால், பயணிகள் சேவை இடம் பெறாது போகும். இதன் காரணமாகத் தற்போது நெடுந்தீவு மக்கள் இரு தலைக் கொள்ளி எறும்புபோல் தங்கள் நளாந்த நடவடிக்கையில் ஈடுபடவேண்டியுள்ளது.

இதேவேளை - சிலர் தம்மிடமுள்ள வெளி இணைப்பு இயந்திரம் பூட்டிய படகுகள்மூலம் சென்று, என்றும் இல்லாதவாறு தற்போது தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றமை அரச திணைக்களங்களின் கையாலாகாத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## விவசாயிகளைப் பதியக் கோரிக்கை

உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளான மறவன்புலவு, கைதடி நாவற்குழி, கோயிலாக் கண்டி ஆகிய பகுதிகளில் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் அனைவரையும் கமநல நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரா அறிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் கடந்த பல வருடங்களாக விவசாயம் மேற்கொள்வதற்கு படைத்தரப்பால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (29)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : அ.அலெக்சனா
முகவரி : ஆனைக்கோட்டை.

ஏழாவது அகவையில்



பெயர் : பி.றோஜிதன்
முகவரி : கனா வீதி, மாதகல்.


# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைச் சேவையில் நிரந்தரமாக்க சமுர்த்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணியாற்றி, மூன்று வருடங்களை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களைச் சேவையில் நிரந்தரமாக்கும் பொருட்டு அந்தந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிச் சான்றிதழைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (44)

# விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்களில் உரியவர்களே பங்கு பற்ற வேண்டும்

விவசாயிகளின் செயற்திறனை நவீன உலக வளர்ச்சிக்கேற்ப திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் நடாத்தப்பட்டுவரும் தொடர் விவசாயப் பயிற்சி வதிவிடக் கருத்தரங்கில் விவசாயிகள் பங்குகொள்ளாது தமது பிள்ளைகளையும், பாடசாலை மாணவர்களையும் அனுப்புகின்றனர் என பயிற்சியை வழங்குவோர் தெரிவித்தனர்.

இதனால், விவசாயிகளுக்கு ஏற்படும் தொழில்ரீதியான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதில் பல கஷ்டங்கள் உள்ளதாகவும், இதில் விவசாயத்தை மேற்கொள்வோர் நேரடியாக வருகைதந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது இலகுவாக இருக்கும். குறிப்பாக - நோய்த் தாக்கம், பசளையிடல், நீர்ப்பாசனம் போன்ற செயல்முறைரீதியான பிரச்சினைகள் குறித்து விவசாயிகள் நேரடியாகப் பங்குபற்றிக் கருத்துக்களைப் பரிமாறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (101)

## ஏ.ஆர்.வி.தடுப்பு மருந்து பற்றாக்குறை

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க் கடிக்கான (ஏ.ஆர்.வி.) தடுப்பூசி மருந்து இந்த முறை குறைவாகவே கிடைத்துள்ளது. இதனால், இங்கு ஊசி ஏற்ற வரும் மக்கள் பலர் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், நீரிழிவு மற்றும் கிளினிக் நோயாளிகளுக்கான மருந்துகளும் குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளது. இதன்காரணமாக நோயாளர் வெளிக்கடைகளில் மருந்துகளை வாங்கவேண்டியுள்ளது. (101)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :--------------------
--------------------
முகவரி :--------------------
--------------------
பிறந்த ஆண்டு:--------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்


# உலக உணவுத் திட்டத்தால் ஆயிரம் மெட்றிக்தொன் உணவுப்பொருட்கள் குடாநாட்டில் விநியோகிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்த வருடம் ஆயிரம் மெட்றிக் தொன் உணவுப் பொருட்களை யாழ். மாவட்டத்தில் விநியோகிக்கவுள்ளோம் என, உலக உணவுத் திட்ட இணைப்பாளர் றயன் அன்டேர்சன் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட அறிமுகப்பட்டறை நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்றபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

சென்ற வருடம் எமது திட்டம் சிறந்த முறையில் நடைபெற்ற போதும் சில குறைபாடுகள் காரணமாக முழுமையாகச் செயற்படுத்த முடியவில்லை. எனினும், எட்டிற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் எமது செயற் பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறோம். உலக உணவுத் திட்டத்தை - இந்தமுறை சிறப்பாகச் செயற்படுத்தப் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது ஒவ்வொரு திட்டத்திற்கும், ஒவ்வொரு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எமது திட்டம் சரியாகச் செயற்படுத்தப்படுகிறது என்பதைப் பார்வையிடுவதற்கு மேற்பார்வை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்காகத் திட்டக் கண்காணிப்புக்குழுவொன்று கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு அரச அதிகாரிகளினதும், பிரதேச செயலர்களினதும், கிராம சேவை உத்தியோகத்தர்களினதும், மக்களதும் ஆதரவு எமக்குக் கிடைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் குடும்பங்களின் உள்ளக வாழ்க்கைத் தரத்தினை அறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைத் நோக்கமாகக் கொணடது.

நாம் தற்போது திட்டப் பிரதேச பிரமாண 'டிப்படையில் எட்டுச் செயற் திட்டங்களை மேற்கொள்கிறோம். எமது செய:ற்திட்டம் சென்றமுறை சிறப்ட!ாக நடைபெற்றது என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டும் தெரிவித்தார்.

இதைவிட, ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு புனரமைச்சு நடவடிக்கைக்கான பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ"ம் எமக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

நாம் எமது திட்டத்தினைச் சிறப்பாக மேற்கொள்வதற்குப் பல சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த நடவடிக்கைகளை இனிவரும் காலங்களில்தான் அமுல்படுத்தப்படவுள்ளன.

எனவே, எமது திட்டம் சிறப்பானதொரு திட்டமாக அமையும் என நாம் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். (தீ)



யாழ்.மெலிஞ்சிமுனை றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்!வல்லுநர் போட்டியில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கெ.இரத்தினசிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அதிபர் என்.நாகராசாவும் காணப்படுகின்றனர். (100)

## வருடாந்த மஹோற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் - இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஜூன் மாதம் '2 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## படகு சேவை சீரின்மையால் சீருடைத்துணி வழங்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான 2003 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைத் துணிகள், நெடுந்தீவுப் பிரதேசத்தில் விநியோகம் செய்யப்படவில்லை.

வேலணைப் பிரதேச செயலகத்தில் இந்தத் துணிகள் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளபோதும், படகுச் சேவை சீரின்மையால் அவற்றை நெடுந்தீவுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் தாமதம் ஏற்படுகின்றது.

பயணிகள் சேவைக்கு படகுகள் போதாதுள்ள வேளையில், தற்போது இநதச் சீருடைத் துணிகளை எடுதது வருவதென்பது முடியாத காரியம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

# மணற்காடு - பொற்பதி கடற்கரை வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பகுதிகளுக்கான மணற்காட்டுக்கும், பொற்பதிக்கும் இடைப்பட்ட கடற்கரைவீதியை வடமராட்சிக் கிழக்கு புனரமைப்பு புனர்வாழ்வுக்குழு அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

இரண்டு கிலோ மீற்றர் தூரமுள்ள இந்த வீதியை - செப்பனிடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பொற்பதி மக்கள் பருத்தித்துறைக்கு வருவதென்றால், குடத்தனை ஊடாக எட்டுக் கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து சென்று, பருத்தித்துறையை அடையவேண்டியுள்ளது.

இந்தப் பாதை மணற்காடு - பொற்பதி கடற்கரை வீதி செப்பனிடும் பணி முடிந்ததும், பருத்தித்துறையை நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் சென்றடைய முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியால், கடற்தொழிலாளர் பெரிதும் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (17)

# சேதமடைந்துள்ள மரங்கள் மட்டுவிலில் தறிக்கப்படுகிறது

(மட்டுவில்)

வைகாசி மாதப் பருவக் காற்று ஆரம்பித்துள்ளதையடுத்து, சேதமடைந்துள்ள பனை - தென்னை மரங்கள் முறிந்து விழும் அபாய நிலையுள்ளதால், இவ்வாறன மரங்களை தறித்து அழிக்கும் நடவடிக்கையில் மட்டுவில் பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் ஒரு பாடசாலை மாணவி - இவ்வாறு முறிந்து விழுந்த பனை மரத்தினுள் அகப்பட்டு, தெய்வாதீனமாகச் சிறு காயங்களுடன் தப்பியிருந்தது தெரிந்ததே.

2000 ஆம் ஆண்டு, யுத்த நடவடிக்கையின்போது, ஷெல் வீச்சால் பாதிக்கப்பட்டும் மற்றும் பட்ட நிலையிலுள்ள மரங்களுமே இவ்வாறு ஆங்காங்கே தறித்து வீழ்த்தப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (24)

# வலி.வடக்கு பிரதேச சபையால் சோலைவரி அறவிடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேச சபை மீண்டும் சோலைவரி அறிவிடும் நடைமுறையினை மேற்கொள்ளவுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நன்கொடை நிதி வீதிப்புனரமைப்பு, பராமரிப்பு, போக்குவரத்துச் செலவு, காகிதாதிகள் போன்ற செலவீனங்களுக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் தனது எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு ஆதனவரி அறவீடு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் மதிப்பீடு செய்யப்பட்ட விகிதத்திலேயே தற்போதும் வரி அறவிடப்படுவதாகவும், இதனால் சபைக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால், மீண்டும் புதிதாக வரி மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் ஆதனங்களை அளந்து புதிய வரி விதிப்பதற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. (101)

## அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளது ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்தால் உரிய கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டைக்குரியவர்களது பெயர், விபரங்கள் கிராம அலுவலர்களது அலுவலக விளம்பரப் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் நேரில் சென்று கிராம அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# கலாசரம்



சிறுகதை

# விளிம்பு மனிதர்கள்

## யோ.கர்ணன்





அவன் அச்சத்தால் பீடிக்கப்பட்டவனாகக் காணப்பட்டான். முகமெங்கும் கலவரத்தின் ரேகைகள் படர்ந்தவாறிருந்தன. நல்லவேளையாக தங்குமிடத்தில் அவனது நண்பர்களெவரும் இல்லாதிருந்தனர். இருந்திருந்தால் இவனின் படர்ந்த ரேகையைப் பார்த்து, தம்மிலும் ரேகை படர்வதாக எண்ணிக் கலவரமுற்றிருக்கக் கூடும்.

முன்னெப்போதும் இவ்வளவு அச்சம் அவனில் நிறைந்திருந்ததில்லை. அப்போதெல்லாம் மிகக் குறைவான அளவு அச்சமே தன்னில் நிறைந்திருந்ததாகவும், இப்போதெனில் தன்னை அச்சம் முழுமையாகவே நிரப்பிவிட்டதாகவும் நினைத்தான்.

இந்த விடுதியிலிருந்து தான் வெளியேறினால்... அதிகமேன், கதவினூடாக தலையைச் சற்று நீட்டி வெளியே பார்த்தால்க்கூட தன் தலை பறிபோய் விடுமென அஞ்சினான். தன் தலையொன்றே குறியென தலைக்கு மேலே பரந்துள்ள வானத்தில் இறக்கை அடித்தபடியும்... இறக்கை விரித்தபடியும் ஏராளம் கழுகுகள் பறப்பதாக நினைத்தான். துடுக்குத்தனம் மிகுந்த சில கழுகுகள், கதவினோரத்திலேயே பதுங்கியிருக்கக்கூடுமெனவும் எதிர்பார்த்தான். தன் உயிர்பறிபோகும் வரையிலும் தலையைப் பாதுகாத்தே தீர்வது எனத் தீர்மானித்தான்.

உட்கார்ந்திருந்த நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

தன்னில் நிறைந்திருந்த அச்சத்தை வெளியேற்ற விரும்பியவனாகக் காணப்பட்டான். இந்த அச்சம் ஒன்றே அதிக கனம் தருவதையும் இந்தக் கனம் தன்னை நடக்க விடாதென்பதையும் நன்கறிந்திருந்தான். அச்சத்தை வெளியேற்ற வழியொன்று தேடிச் சிந்திக்கலானான்.

அவனுக்கு உட்கார்ந்திருப்பது அதிக சிரமமாக இருந்தது. நேரத்தைப் பார்த்தான் ஐந்து மணியாகிக் கொண்டிருந்தது. மதியம் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்தான். இவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பதை நினைத்து ஆச்சரியமுற்றான். இதன் பின்பே முள்ளந்தண்டு வலிப்பதை உணர்ந்தான்.

எங்கேனும் வெளியே செல்ல விரும்பினான்.

கனம் தான். வெளியே செல்வதென்ற நினைப்பே அவனுள் அச்சத்தை உண்டு பண்ணியது. மழை நாளில் பரவும் குளிர்போன்ற இலேசான குளிர் உடலெங்கும் பரவ அச்சம் நிறைந்தவனாகக் காணப்பட்டான். கழுகுகள் குறித்து அச்சமுற்றான்.

கழுகுகள் வானத்திலும்... கதவின் வெளியேயும் இருக்கின்றனவோ இல்லையோ சிவத்தின் சலூனிலும்.. தயாவின் தேனீர்க்கடையிலும்... மில்லிற்கு அருகிலுள்ள சந்தியிலும் (சந்தியில் பெரிய ஆலமரம் நிற்கின்றது) இன்னும் இளைய பெண்கள் கூடும் இடங்களிற்கு எதிரேயிருக்கும் மரங்களின் கீழும் நிச்சயமாக அவை இருக்கும் என நம்பினான். தவிரவும், சில இளைய பெண்களின் (அவர்கள் மிக அழகாகக் கூட இருக்கலாம்) மனங்களில்கூடப் போய்ப் பதுங்கிக்கொண்டிருக்கலாம் என நம்பினான். தான் போகவேண்டிய இடத்தையடைய, இவ்வளவு இடங்களையும் கடந்து போகவேண்டியிருப்பதை நினைத்து எரிச்சலுற்றான். இந்த இடங்களைக் கடக்காமல் தான் போக வேண்டிய இடத்திற்குக் குறுக்கு வழிகள் ஏதேனும் இருக்கின்றதா என யோசித்தான். ஒன்றும் அகப்படவில்லை.

எப்போதோ ஜெகன் காட்டிய வழி ஒன்று மங்கலாக நினைவுக்கு வந்தது. எனினும் அவ்வழியை உதறி எறிந்துவிட்டான். அது மணல் நிறைந்த ஒழுங்கை. அது கூடப் பரவாயில்லை. சட்டிக்குள்ளிருந்து அடுப்பிற்குள் விழுந்த கதையாக அப்பாதையைப் பாவிப்பது அமைந்துவிடுமென அஞ்சினான். அவ் ஒழுங்கை நிறையவும் நாய்கள் நிற்பதை அவனறிந்திருந்தான். எல்லா நாய்களும் இல்லாவிடினும், அதில் ஏதோவொரு நாய் தன்னைக் கடிக்குமென்று அஞ்சினான். பசியும் வெறியும் மிகுந்த நாயொன்று தன்னைக் கடித்து, தன் ஒற்றைக்காலையே பறித்தெடுத்தால் என்ன நடக்குமென எண்ணிப்பார்த்தான்.

இந்த வீதி வழியேயும், இந்த வீதியையும் கடந்து அவளது வீடிருக்கும் வீதி வழியேயும் யாருமற்ற தனிமையைச் சுமந்தபடி ஊன்று கோலுடன் திரிவதாகக் கற்பனை செய்து பார்த்தான். தவிரவும் நாய்க்கடிக்கு இலக்கானால் தொப்புளைச் சுற்றிலும், இருபத்தொரு ஊசி போடவேண்டுமென்பதையும் நினைத்துப் பார்த்தான். அடி வயிற்றில் கூச்சப் புள்ளியொன்று உருவாகி சுழித்துப் பரந்தது. அவ் வீதியைப் பாவிப்பதில்லையென முடிவு செய்தான்.

கழுகுகளுடன் நாய்கள் குறித்தும் அச்சமுற்றான்.

இப்போது அவனுக்கு அவசியம் தேவைப்பட்டது, எங்கேனும் வெளியே போவது.

எங்கேயாவது... எங்கேயாவது...

சிறைக்கூடம் போலிருக்கும் இந்த இருண்ட அறையை விட்டு...

எப்போது பார்த்தாலும் கால்களினுள்ளும் கைகளினுள்ளும் இருள் தட்டுப்படும் இந்த அறையை விட்டு... எங்கேயாவது... எங்கேயாவது...

தனக்கும் பெரிய அலுவல்கள் இருப்பது போல... வேகமாகச் சைக்கிளை மிதித்தபடி சென்று, வளைவுகளில் மணியொலித்தவாறு தன் முன்னே செல்லும் இளைய பெண்களைக் கடந்து, அவர்களது சைக்கிளுடன் தன் சைக்கிள் முட்டுவது போல வெட்டி, அவர்களைக் கலவரமுறவைத்து... கண்களை மூடியும், கைகளால் முகத்தை மூடியும் அவர்கள் பயமுறுவதை தலைசாய்த்து திரும்பிப்பார்த்து ரசித்து...

"மண்டு" "எருமை" "மூஞ்சையைப் பாரன்" இதுபோல அவர்கள் திட்டும் ஏதோவொரு பேச்சை ரசித்தபடி போக வேண்டுமென விரும்பினான்.

ஏராளம் வீடுகளில் நின்று கதைத்து... மிக மிகத் தொலைவுகளிற்குப் போக விரும்பினான். இவ்வளவு விருப்பங்கள் இருந்தும் அதனை நிறைவேற்ற முடியாதிருப்பதாக நினைத்தான். தான் போவதற்கு ஒரேயொரு இடம் மாத்திரமேயிருப்பதாக நினைத்து விரக்தியுற்றான்.

இந்தப் பெரிய ஊரில் தனக்கு மட்டும் யாருமில்லாமல் போய்விட்டார்களே என நினைக்கவே அவனுக்கு அழுகை வந்தது. இப்படி அழுதழுதே தன்னில் நிறைந்திருந்த விரக்தியையும் அச்சத்தையும் கரைத்து வெளியேற்றிவிட முடியுமென்ற ஒரு நிலை வந்தால் எவ்வளவு நல்லதென நினைத்தான். அப்படி ஒரு நிலை வருமானால் கடலளவு கண்ணீர் விடவும் தயாராக இருந்தான்.

அவனால் தொடர்ந்தும் உட்கார முடியாமல்ப் போனது.

கதிரையை விட்டெழுந்து, வெளியே போவோமா என நினைத்தான். அதிக அச்சம் கிளர்ந்தது. உள்ளங்கைகளுடன் பாதங்களும் வியர்ந்தன.

தரையில் கால்களை வலுவாக ஊன்றி நிற்க முயன்றும், முடியாமல் கால்கள் நடுங்குவதை உணர்ந்தான். இரண்டடி நடந்து, ஜன்னல் வழியே வீதியை எட்டிப்பார்த்தான். சில பையன்கள் போனார்கள். அவர்கள் ஜீன்ஸ் அணிந்திருந்தார்கள். அவனுக்கு அச்சம் பிறந்தது. காணக்கூடாத விஷ ஜந்துக்களைக் கண்டவன் போல தலையை உள்ளிழுத்துக்கொண்டான். அவர்கள் தன்னைக் கண்டிருப்பார்களோ எனவும் ஐயமுற்றான். இவ்வளவு நேரமும் உட்கார்ந்திருந்து விட்டு இப்போது போய் எட்டிப்பார்தேனே என தன்னையே நொந்துகொண்டு கதிரையில் வந்து உட்கார்ந்துகொண்டான்.

வீட்டின் சுவர்களினுள்ளும் மரக்கொப்புகளினுள்ளும் கூரைகளினுள்ளும் பற்றைகளினுள்ளும் ஒழிந்திருந்த இருள் மெல்ல மெல்ல வந்து தன்னைக் கடிப்பதைக் கவனித்தான். ஏற்கனவே இருளான இந்த அறைக்குள்ளிருக்கவேண்டிய துரதிஷ்டத்தையும் எண்ணி வேதனையுற்றான்.

சில காலம், முன்னர் வரை இப்படியானதொரு அச்சமும் விரக்தியும் தன்னைவந்து சூழாதிருந்ததை ஆச்சரியத்துடன் நினைவுகூர்ந்தான். இப்போது மட்டும் இவை எங்கிருந்து கிளம்பிவந்தன என்பது அவனுக்குப் புரியவில்லை.

இந்த ஊரில் தான் போவதற்கிருக்கும் ஒரே இடத்திற்கும் விரைவிலேயே போனால்தான் உண்டு, தாமதித்தால் ஊர் அடங்கிவிடும். அதன் பின் பயணம் சென்று எந்தப்பயனும் கிட்டாதென்பதை உணர்ந்திருந்தான். ஆயினும் பயணம்செய்ய அஞ்சினான். விரைவிலேயே நிறைய அலுவல்கள் உள்ள ஒருவனாகத்தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தான். சற்றுமுன் கடந்து சென்ற அந்தப் பையன்களின் முன்னால் ஒரு மாலையிலேயே ஆறு ஏழு தடவைகள் பயணிக்கவேண்டும்... அலுவலகம் தங்குமிடமென அடைந்து கிடக்கக் கூடாதென நினைத்தான்.

எப்படியும் அவளது வீடிருக்கும் தெருவிற்குப் போக வேண்டுமென எண்ணிக்கொண்டான்.

இந்தப் பரந்த ஊரில் தான் போவதற்கிருக்கும் ஒரே இடமாக அதனைக் கருதினான். தான் போவதற்கிருக்கும் ஒரே இடமாக அந்த வீதிதான் இருக்கிறதே தவிர, எந்த வீடு மில்லையென நினைத்தான்.

இங்கிருந்து புறப்பட்டு பிரதான வீதியிலேறி, கடற்கரைப் பக்கமாகப் பயணித்து, பாபு கிறீம் ஹவுஸின் முன் வீதியால் திரும்பி, மில்லின் பக்கத்து ஒழுங்கையினால் போக அவளது வீடுவரும்.

தான் பயணப்பட, அலுவலகம் தவிர்த்து, இருந்த ஒரே பயணப் பாதையாக இதனைக் கருதினான். முன்னர் அப்படியல்ல. எல்லா இடமும் திரிந்தான்.

பிரதான வீதிக்கென்றில்லாமல் எதிர்ப்பக்கமாகக் கூடப் பயணித்தான். அங்குதான் அவளும் ஜீன்ஸ் அணிந்த பையன்களும் படிக்கும் ரியூசனிருந்தது. வீதிகளுக்காக, புளியமரமொன்றின் கீழ் எதுவித மறைப்புமில்லாமல் சிறு கொட்டகையொன்றில் ரியூசன் நடந்தது.

அந்த வீதியால் இரண்டு மூன்று தடவைகள் போய் வந்தான். ஆயினும் ரியூசன் பக்கம் திரும்பிப் பார்ப்பது கிடையாது. தூரத்தில் போகும்போதே கவனித்துக்கொள்வான். அவளை எங்கிருந்தாலும் சுலபமாகக் கண்டுபிடித்துவிடுவான். என்ன அடையாளத்தை வைத்து இனம் காண்கின்றேன் என்பது அவனுக்கே புரியாமலிருந்தது. அவளது மஞ்சள் நிறமா? அணியும் ஆடைகளா... அல்லது வேறேதும் அடையாளங்களா தான் இனம் காண்பது என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவனுடன் நெருங்கிப்பழகும் அலெக்சிடம் கூடச் சொல்லாமல் அவளிடம் எத்தனை சட்டைகள், என்ன வகையான சட்டைகள் இருக்கின்றன என்றெல்லாம் கணக்கு வைத்திருந்தான். அண்மை நாட்களாக அவள் அணியும் மண்ணிறப் பாவாடையும்.. மண்ணிறக் கறுப்பு, வெள்ளை கலந்த ரீசேட்டும் அவனை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

தனக்காக இருக்கும் ஒரே ஜீவனென அவளைக் கருதினான்.

போவதற்கு இடமற்ற பொழுதுகளில் தோன்றும் விரக்தியும் தனிமையும் உலகம் சுருங்கி மனிதர்கள் தனித்தனித் தீவு ஆகிறார்களோ, என்ற சந்தேகமும் அவள் விடயத்தில் எழாமலிருப்பது குறித்து ஆச்சரியமுற்றான். வேறு மனிதர்களே தேவையில்லை, அவளொருத்தியே போதும் வாழ்வதற்கென எதை வைத்து நினைத்தேன் என யோசித்தான்.

அவளுடன் விரைவிலேயே கதைக்க வேண்டுமெனத் தீர்மானித்தான்.

அனேகமாக அந்தப் பையன்கள் ரீயூசன் முடிந்தே போவார்களெனவும், அவளும் வீட்டுக்குப் போவாள், இப்போதே புறப்பட வேண்டுமென நினைத்தான்.

புறப்படுவோம் புறப்படுவோம் என அடிக்கடி நினைத்தானே தவிர, அவன் புறப்படவில்லை. அச்சத்தின் கனம் அவனை எழவிடாமல் அழுத்திப் பிடித்து வைத்திருந்தது.

இன்றும் புறப்பட்டு நேற்றைப் போலவே ஆகிவிட்டால்...

அவனால் மேற்கொண்டு சிந்திக்க முடியாமலிருந்தது. முள்ளந்தண்டில் எதுவோ ஓடி மறைந்தது.

இந்த அச்சம் ஒரு பத்து நாட்களாகத்தான் அவனைப் பீடித்திருந்தது. தன்னைக் குறிவைத்து ஏராளம் கழுகுகள் பசியோடலைவதான அச்சம். தன் தலையைக் கண்ட மாத்திரத்தில், ஒவ்வொன்றும் கொத்திக்குதறிவிடுமென்ற அச்சம்.

ஆரம்பத்தில் இதனையொரு சிறு பிரச்சினையாகவே கருதினான். நம்மைவிட, அப்படி என்ன பெரிய பிரச்சினை என்ற தர்க்கத்தையும் கொண்டிருந்தான். அந்த ஜீன்ஸ் அணிந்த பையன்களைக்கூட சினேக பாவத்துடனேயே நோக்கினான். அவர்களில் யாராயினும் சினேகிதம் கொண்டிருந்தால் அதிகம் மகிழ்ந்திருப்பான். அவர்களில் யாருடனாவது மாலைப்பொழுதுகளையும் தேனீரையும் பகிரத் தயாராகவே இருந்தான்.

அவர்கள்தான் அதற்குத் தயாராக இருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்தே அவர்கள் விரோத பாவத்துடன் நோக்கியதை இனம் காணமுடியாமல்ப் போனதை மிகப்பெரிய துரதிஷ்டமாகக் கருதினான்.

பார்வைகளினுள்ளும்... சொற்களினுள்ளும் கொடிய விஷத்தை யாருமறியாமல் அவர்களால் எப்படி வீச முடிந்தது.

அவர்கள் தான் வீசினார்கள், என் மனதில் எப்படி அதனைப் புகவிட்டேன்?

அவை புகுந்து அச்சப்புள்ளியொன்றை உண்டு பண்ண எப்படி அனுமதித்தேன்.

அவன் புரியாமல்க் குழம்பினான். இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை. விடயம் நம்மை மீறிப்போய்விட்டது. இப்படி ஒளிந்து திரிவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

அவளது வீடிருக்கும் தெருவினாலும், ரியூசனடியாலும் பயணித்ததே அவர்களைச் சந்தேகம் கொள்ள வைத்திருக்கும் என நினைத்தான்.

கண்ட சினிமாவையும் பார்த்துவிட்டு, ஏதோ ஒரு நடிகனைப் போல தலையை ஒரு கோலத்தில் வெட்டிக் கொண்டு அடிக்கடி தலையைச் சிலுப்பிக்கொள்வானே கறுத்தப் பையன் ஒருவன் அவனில்தான் இவனிற்கு எரிச்சல் வந்தது. அவன் தான் தனது பிரதான எதிரியென நினைத்தான்.

"டேய் மச்சான்... குழந்தையில்லா வீட்டில் கிழவன் தொட்டில விளையாடின கதை தெரியுமே..."

"சிலர் படிப்பில் மினக்கெட... சிலபேர் பின்னாலை அலையினம் பாப்போம் என்ன முடிவெண்டு.

"இதில என்ன முடிவு... தேவதாஸ்தான்..."

இந்த வார்த்தைகளுடன் அந்தப் பையன்கள் உதிர்க்கும் அத்தனை வார்த்தைகளிற்கும் பயந்தான். அவர்கள் உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லின் முடிவிலும் தன்னைக் கொல்லும் தோட்டா ஒன்று பதுங்கியிருப்பதாகவே நினைத்தான்.

அவனால் தொடர்ந்தும் இருக்க முடியாமல் போகிறது. இன்னும் ஒருநிமிடம்... ஒரேயொரு நிமிடம் இருந்தாலே பைத்தியம் பிடித்துவிடுமென நினைத்தான். தான் பைத்தியமாக அலைவதாகவும் அந்தப் பையன்கள் கல்லால் அடிப்பதாகவும்... துப்புவதாகவும் இன்னும் ஏராளம் சேட்டைகள் புரிவதாகவும் கற்பனை செய்து பார்த்தான்.

அவன் துள்ளி எழுந்தான். பைத்திய நிலைக்கும் தனக்குமிடையிலிருக்கும் தூரம் ஒருநிமிடம் தானென நினைத்தான். ஒரே ஓட்டமாக ஓடி கடந்த கணங்களைக் கூட கடக்க விரும்பினான். கழுகுகளையும் நாய்களையும் ஏன், ஜீன்ஸ் அணிந்த பையன்களைக் கூட மறந்தான். சேட் ஒன்றை அணிந்துகொண்டு வெளியே வந்தான்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு வீதியிலிறங்கினான். தெருவோர மணலில் புதைந்து கிடந்த அச்சம் மீளவும் அவனுக்குள் புகுந்து கொண்டது தெருவிற்கு இறங்கியது முட்டாள்தனமான காரியமோவெனவும் யோசித்தான்.

இனி எதுவும் செய்யமுடியாதென்ற நிலையில் சைக்கிளை மிதித்தான். அச்சம் அவனை விட்டு இறங்கவேயில்லை. இரக்கத்துடன் கலந்த உடலின் சகல (7ஆம் பக்கம் பார்க்க)

(6 ஆம் பக்க தொடர்ச்சி) பாகங்களிற்கும் பரவியது. அவனது உள்ளங் கைகளிலும்... உள்ளங்கால்களிலும் கூடப் பயத்தின் முகங்கள் தெரிந்தன.

இளவயதுப் பையனொருவன் தூரத்தே வந்தான். இவனுள் அச்சம் பல மடங்காகியது. பையன் ஒரு துப்பாகியையோ, வாளையோ மறைத்துக்கொண்டு வருவதாகவும், கடந்ததும் தன் முதுகில் சுடவோ, குத்தவோ செய்வான் என நம்பினான்.

இதயத்துடிப்பு எகிறியது. பையன் தன்னை உற்றுப்பார்ப்பதாக நினைத்தான். அந்தப் பார்வை தன்னை அரிப்பதாகவும்... தன் முடிவு நெருங்கிவிட்டது என்று கூட நினைத்தான்.

உடம்பில் வியர்க்க நேரே பார்த்துக் கொண்டு போனான்.

பின்னாலிருந்தும் ஒரு பையன் கடந்து போனான்.

சைக்கிளின் வேகத்தை வெகுவாகக் குறைத்தான். அவனுக்கும் தனக்குமிடையில் இடைவெளியை ஏற்படுத்திக்கொண்டான்.

சைக்கிள் மிதிப்பதை வெகு பிரயத்தனப் பட்டே செய்தான்.

எதிரே சில பெண்கள் வந்தனர். அவர்களிற்கும் தனது விடயம் தெரிந்திருக்கும் என நம்பினான். அவர்கள் வெகு இயல்பாகவே வந்தபோதும் தன்னைப் பற்றி எதையோ கீழ்க் குரலில் கதைத்துவிட்டதாகவே நம்பினான். அவர்களைப் பார்ப்பதைத் தவிர்த்தான். இயல்பாயிருக்க முடியாமல் தவித்தான்.

எதிரே வரும் ஒவ்வொருவரும் தன்னை விழுங்குமாப் போல பார்ப்பதாகவும் அவர்களின் பார்வையின் பொருளும் பையன்களின் பார்வையின் பொருளும் ஒன்று என்றே நம்பினான்.

தான் எங்கோ தப்பி ஓடிக்கொண்டிருப்பதாகக் கூட நினைத்தான். இந்தத் தப்பித்தலின் முடிவில், யாருமேயற்றதொரு கிரகத்தையும் அது நிறையவும் பூக்களையும் எதிர்பார்த்தான். அங்கே தான் வாழ்வதாகவும் கற்பனை செய்தான்.

இன்னுமிரண்டு பையன்கள் எதிரே வந்தனர்.

தான் கொண்டுவந்த வெகு சொற்பமான நம்பிக்கையையும்... துணிவையும் ஏற்கனவே கடந்தவர்களை எதிர்கொள்ளும் போதே செலவழித்து விட்டதாக நினைத்தான். பெரிய யுத்தகளமொன்றில் ஒரு சிறிய குறுவாளொன்று கூட இல்லாமல் நிற்பதாகவும் எதிரிகள் வாள்களுடனும, ஈட்டிகளுடனும் சூழ வருவதாகவும் அவர்களின் அத்தனை வேல்களும், வாள்களும் தன்னில் பாய்வதாக...

கண்களை இறுக மூடிக்கொண்டான். வியர்வையில் தெப்பமாக நனைந்திருந்தான். சைக்கிள் மிதிக்க முடியாமல் திணறினான். அவ்விடத்திலேயே விழுந்து விடுவேனோ எனவும் அஞ்சினான்.

இனி சிவத்தின் சலூன்... தயாவின் தேனீர்க் கடை மில்லிற்கு அருகிலுள்ள சந்தி இவற்றைக் கடக்க வேண்டியிருப்பதை நினைத்து அதிர்ந்தான். அவனுக்கு அழுகை வந்தது. உயிர்ப்பிச்சை கேட்டும் போரில் தோற்ற போர் வீரன் ஒருவனைப் போல நின்றான். தனது நிராதரவான நிலையை உணர்ந்தான். தனிமையின் கொடிய நகங்களின் கீறலில் வேதனையுற்றான்.

சைக்கிளை நிறுத்தினான். எதுவும் செய்ய முடியாத ஒருவனாகத் தன்னைக் கருதினான் மேற்கொண்டு பயணிப்பது முடியாத காரியமெனவும்... தான் உலகின் விளிம்பிலேயே நிற்பதாகவும் நினைத்தான். மேலே ஒரு அடி எடுத்து வைத்தால்கூட இந்த உலகத்தை விட்டு விழுந்து செத்துப்போய் விடுவேனென அஞ்சினான்.

தன்னைக் கடந்த பையன்கள் திரும்பிப் பார்த்துப் போவதைப் பார்த்தான். அவர்களையும் அவளுடன் படிப்பவர்களாகவே கருதினான். தான் இயலாமையுடன் தோற்று நிற்பதை அவர்கள் மகிழ்வுடன் தமக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதிப் போவதாக நினைத்தான்.

உலகின் விளிம்பிலிருந்து தப்பி மத்திக்குப் போக விரும்பினான். எந்தப் பொழுதிலும் கீழே விழாத ஓரிடத்தில் இருக்க விரும்பினான். சைக்கிளைத் திருப்பினான். உடலில் மீதமிருந்த வலுவைத்திரட்டி மிதிக்கத் தொடங்கினான். இந்த மனிதர்களிடமிருந்தும்... அவர்களின் கொடிய செயல்களிலிருந்தும் தப்பித்து வாழ கொடிய சிறைக்கூடம் போலிருந்த தன் தங்குமிட அறைக்கு ஓடினான்.

எதிர்ப்பட்ட மனித முகங்கள் எதனையும் பார்க்காமல் ஓடினான்.

சைக்கிளைச் சுவருடன் சாத்திவிட்டு பட்டக்கூடத் தோன்றாதவனாக அறைக்குள ஓடினான். சேட்டைக் கழற்றி எறிந்து வீட்டுக் கதிரையில் விழுந்தான்.

நிம்மதிப் பெருமூச்சு பாதிவிட்டவன்,

திடீரென உலகின் விளிம்பு தன்னைத் தொடர்ந்து சுருங்கிச் சுருங்கி தன் பின்னாலேயே வந்துவிட்டதாக நினைத்தான். விளிம்பின் சுருங்கல் தன்னை நிச்சயமாகப் பலிகொள்ளுமென நம்பினான். அவன் தொடர்ந்தும் வாழவே விரும்பினான்.

இருப்பினும் மாட்டிக்கொண்டுவிட்டதாக நினைத்தான்.

தரையில் பதிந்திருந்த கால்களைத் தூக்கி, கதிரைக்குள் நன்கு சுருண்டு உட்கார்ந்துகொண்டான். விளிம்பின் சுருக்கத்தைக் காணக்கூடாதென கண்களையும் இறுக மூடிக் கொண்டான்.

விளிம்பின் சுருக்கம் நிற்கவும்... தன் உயிர் பிழைக்கவும் வேண்டிப் பிரார்த்திக்கத் தொடங்கினான்.

# இலக்கிய முத்து

## வாசுகியின் விம்பம்!

வாசுகி அவள் பெண்குலத்தின் பெரு விளக்கு, அழகின் ஒட்டுமொத்தக் குத்தகை, அன்பின் உறைவிடம், அறிவு அவளில்தான் கோவில்கொள்கின்றது. தன் உயிரிலும் மேலாக கண்ணனைக் காதலிக்கும் உத்தம பத்தினியவள். தன்பொய்யாமறையால், அழியாப்புகழ் பெற்ற வள்ளுவனின் வாழ்க்கைத்துணைவியே வாசுகி.

வள்ளுவன் கண்ணில் தூசுவிழுந்தால், இவள் கண்ணில் நீர்வடியும், அவன் காலில் முள்குற்றினால், இவள் நெஞ்சில் உதிரம் கொட்டும். அவர்களது இல்லறம் என்றும் நல்லறமாகவே நகர்ந்தது. அவர்களது வாழ்க்கையிலேயே என்றும் வசந்தங்களே. வறுமை வந்து தாலாட்டியபோதும், வலுவிழந்து போகவில்லை அவர்கள். பஞ்சணையில் கிடைக்காத அஞ்சுகத்தை பழம்பாயில் அவர்கள் கண்டுகொண்டார்கள்.

வாசுகியின் பார்வை வடியும் பால்முகத்தில் வள்ளுவனின் வானம்விடியும். இவன் பாதம் நடக்கும் சிறு மண்துளியில் இவன் ஆவிதுடிக்கும்.

அன்பான உள்ளங்களைப் பிரித்து வேடிக்கை பார்க்கும் அரக்ககுணம் ஆண்டவனுக்கு என்றும் உண்டு பாசங்களையும் நேசங்களையும் பறித்து, பரிதவிக்கவைக்கும் இந்த நாடகத்தில் நசிங்கிப்போன உறவுகள் பல.

அன்பான உள்ளங்களாக இணைந்திருந்த வாசுகியின் ஆவியை எடுத்துவிட்டான் ஆண்டவன். அந்தோ பரிதாபம் வள்ளுவன் நொருக்கப்பட்ட கண்ணாடியான வள்ளுவன் மனத்திரையில் விழுகின்றது. வாசுகியின் இன்பம் வெறுக்கப்பட்ட வேதனையிலும், கருக்கட்டிக் கொள்கின்றது. ஆசை நாயகியின் பூமுகம் சிந்தனை சிக்கல்களிலிருந்து வெளியேறமுடியாமல் தவிக்கின்றான் வள்ளுவன். பேசிப்பழகிய நொடிப்பொழுதுகள் ஊசி நுனியாகக் குற்றுகின்றன.

ஈரடிக்குறளால் உலகத்தையே அறமெனும் கயிறு கொண்டு கட்டிய வள்ளுவனுக்கு, வார்த்தைகள் போதவில்லை. நான்கடிகளின் தன் உள்ளத்து வேதனையை எண்ணி உருகுகின்றான்.

என்பாசமே ஏன் என்னைவிட்டுச் சென்றாய்? என் பிரியசகியே! அறுசுவை உணவையாக்குவதில் அனுபவம்வாய்ந்த என்அன்பே, ஏன் என்னைவிட்டுத் தூரப்போனாய்? தீராத காதல்கொண்ட என்பிரியமே எங்குசென்றாய். கணவன் சொல்லே தாரக மந்திரம் என, வார்த்தை தவறாத என் உயிரே, வாக்குத்தவறி ஏன் சென்றாய். கண்ணாளன் நான் தூங்கும்வரை, என் கால்களை வருடி தூங்கவைக்கும் என் உறவே, நான் தூங்கிய பின் தூங்கி எனக்கு முன் கண்விழிக்கும் என் கண்மணியே, என்னை தனித்துவிட்டா செல்கின்றாய்?

என் அன்பே! எவ்வாறு இன்று என் கண்கள் தூங்குமென தன் நாயகியை என்னித் வருந்துகின்றார் வள்ளுவர்.

அடிசிற் கினியாளே யன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய் - அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே
போதியோ
என்றூங்கு மென்கண் ணிரா.

(வள்ளுவர்)

-லெஸ்லி

# சினிமா இயக்குநர்

சத்யஜித்ரே அடிப்படையில் ஓர் ஓவியர். சாந்தி நிகேதனில் கலாபவனத்தில் ஓவியத்தை முறையாகப் பயின்றவர்.

உலக சினிமாவின் முக்கிய இயக்குநர்களில் மூன்றுபேர்களாக அகிரா குரோசாவா, சத்யஜித்ரே, குருதத் இவர்களைச் சொல்லலாம்.

இந்த மூவரைப்பற்றி மூன்று புத்தகங்களை 1.சத்யஜித்ரே - ஒரு எளிய அறிமுகம், 2.உலக திரைப்பட மேதை அகிரா குரோசாவா, 3.குருதத் - (கனவில் எரிந்த கலைஞன்) புதுமைப்பித்தன் மற்றும் சந்தியா பதிப்பகம் வெளியிட்டிருக்கின்றது. இவற்றில் இருந்து சில பக்கங்கள்.


சத்தியஜித்ரே

அவர் அங்கு தீட்டிய முதல் ஓவியம், ஒரு குருட்டுப் பிச்சைக்காரனின் ஓவியம். இதில், ஏதென்று தெரியாத ஓரிடத்தில் நிற்கும் குருட்டுப் பிச்சைக்காரன் ஒருவன், தேவதை போன்று தோற்றமளிக்கும் ஒரு சிறுவன், தோள்மீது ஊன்றி நிற்கிறான். சிறுவனின் கையில் பிச்சைப் பாத்திரம் இருக்கிறது.

நாளாக நாளாக சத்யஜித்ரேயின் ஓவியங்கள், இப்படிப்பட்ட கருத்துச்சார்ந்த உள்ளடக்கத்திலிருந்து மாறிக்கொண்டு போய்விட்டன. இவரது சித்திரம் வரையும் பழக்கம், இளமைக்காலத்திலிருந்தே, பரம்பரையாகச் சுவீகரித்துக்கொண்டுவந்தது என்றே சொல்லலாம். வண்ண ஓவியங்களைக் காட்டிலும், சித்திரங்கள் வரைவதில் அவர் ஆர்வம் காட்டினார்.

அவர் பயின்ற சாந்தி நிகேதனில், மிக உன்னதமான ஓவியர்கள் அவருக்கு ஆசிரியர்களாக இருந்தனர். சாந்தி நிகேதன் அவருக்கு இரண்டு விஷயங்களைக் கற்றுக் கொடுத்தது. ஒன்று இயற்கையைக் கவனிப்பது மற்றது ஓவியங்களை கவனிப்பது இயற்கையைப் பார்த்து படம் வரைவதற்காக அங்கு பிற்பகலில் மாணவர்களை அழைத்துச் செல்வார்கள்.

ஒரு கேள்வி எழுகிறது. அவர் ஒரு ஓவியக் கலைஞராக இல்லாமல் ஒரு சினிமா கலைஞராக ஆகியிருக்க முடியுமா? என்கிற வினாவிற்கு முடியாது என்கிற விடையை நாம் கொடுக்கமுடியும்.

ஏனெனில் அவரது சினிமா கலை, அவரது ஓவியக் கலையினால் ஆழமாகப் பாதிக்கப்பட்டது. அவர் ஒரு சினிமாக் கலைஞராக மாறுவதற்கு முன்னர் புகழ்பெற்ற ஒரு வரைகலை ஓவியராக இருந்தார். நூல்களுக்கு முகப்பு ஓவியங்கள், முதல்பக்க அமைப்புக்கள், எழுத்துக்களை அழகிய வடிவங்களாக மாற்றியமைத்த முறை ஆகியவற்றால் பெரும் பெயர் பெற்றிருந்தார். வங்காள எழுத்துக்களை மாற்றியமைத்து அவற்றுக்குப் புதிய வடிவங்களையும் கொடுத்திருந்தார்.

ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், 'பதேர் பாஞ்சாலி'யின் பெயர், இயக்குநர், நடிகர்கள் ஆகியோரின் பெயர்களை அவர் படத்தின் தொடக்கத்தில் போட்டதைக் குறிப்பிடலாம்.

பொதுவாக இதற்குக் கொட்டை எழுத்துக்களைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால், சத்யஜித்ரே அந்தப் படத்தின் குடும்பத் தலைவன் ஹரிஹரர் கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிப்பவராகவும், படித்துக்காட்டுபவராகவும் தொழில் புரிந்த காரணத்தால் முரட்டு நாட்டுக் காகிகத்தில், கையெழுத்துப் போன்ற அமைப்பில் பெயர்களைப் போட்டார்.



சத்யஜித்ரே தனது அப்புவின் முக்கதைக்காக, அப்புவின் பாத்திரத்தை ஏற்று நடிக்க தகுந்த நடிகரைத் தேடிக்கொண்டிருந்தபோது, அவர் தான் எந்தமாதிரி உருவத்தைத் தேடுகிறார் என்பது ஒரு படமாகவே வரைந்துகாட்டி தனது உதவியாளர்களிடம் கொடுத்து அது போன்ற நடிகரைக் கொண்டுவருமாறு செய்தார். இந்த முறையில் தான் அதன் கதாநாயகனான சௌமித்ரா சட்டர்ஜி (Soumitra Chatterjce) யைத் தேடி எடுத்தார்கள்.

சோவியத் திரைப்பட மேதை ஐசன்ஸ்டைன் சினிமா எப்படி எடுக்கப்படவேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டுவிட வேண்டும் என்று சொன்னார். சத்யஜித்ரேயின் சினிமாக்களோ முன்கூட்டியே சித்திரங்களாக வரையப்பட்டுவிடும். 'இந்தச் சித்திரங்களை ஆதாரமாகக்கொண்டு சத்யஜித்ரே தனது ஒவ்வொரு காட்சியையும் எடுத்துவிடுவார்.

எனவேதான் சத்யஜித்ரே ஓர் ஓவியராக இருந்திராமல் ஒரு சினிமா இயக்குநராக ஆகியிருக்கமுடியுமா என்றால் முடியாது என்றே பதில் சொல்கிறோம் .

இந்திரன் (தொடரும்)

## கொண்டு வந்தது...!

சென்ற பள்ளிக்கூடமும்
ஏறிய பேருந்தும்
ஓடிப் பழகிய சைக்கிளும்
ஏற்பட்ட காயமும்
தனியாகச் சென்று
இரவில் சாத்திய படலையும்,
வெறுங்காலில் நடந்த
பாதையும்,
சண்டை பிடித்த நண்பனும்
காய்ச்சலால் விழுங்கிய
குளுசையும்,
உடலில் போட்ட ஊசியும்
கொண்டுவந்தது பயத்தினை!

ஓடி ஏறிய பேருந்தும்,
திருப்பிக் கேட்ட கேள்வியும்
பிடித்த கள்ளனும்
விளையாடிய கிரிக்கெட்டும்
சைக்கிளில் தூர இடம்
சென்று வந்ததும்,
ஊர்க்குளத்தில் நீந்தப்
பழகியதும்,
கொண்டுவந்தது வீரத்தினை!

பிரியா

## அன்றொருநாள்...!

அன்றைய நாளினை
நினைக்கவும் என்னால்
முடியவில்லை!

கிளாலிக் கரையில்
சடலங்கள்,
நடக்கையில்
செல்ல நாய்க்குட்டி
காலைவாருது,
தன்னைத் தூக்கச்
சொல்லி!

அம்மா... அம்மா...
அழுகையுடன் குழந்தை
என்னதான் எடுத்தோம்!

ஓடிவிளையாடிய வீட்டு
முற்றத்தில்,
முள்கூட காலில்
குற்றியதில்லை!

அளந்து நடந்த
பாதம்,
பல்கூட முளைக்கவில்லை
வீட்டு ஓடு உடைந்து
சின்னக் காயம்
காலில்,
மாறியதில்லை
வீட்டு நினைவு!

இதயத்தில்
அடைத்த காற்று,
பதற்றத்துடன்
சிலமணிநேரம்
உள்ளே
இருந்துவிட்டது,
வெளியே
உடல்களைக் கிழிக்கின்றன
குண்டுகளின்
சன்னங்கள்!

தச்சா

அரசியல்கட்டுரை... - கே.ரீ.கணேசலிங்கம்

# தேசியத்தின் எழுச்சியை வலியுறுத்தும் ஈராக்கிய அனுபவ பாடங்கள்

அமெரிக்கா அரசியல் வரலாற்றின் திருப்பங்களை எழுதும் நாடாக ஈராக் மாறிவருகின்றது. வில்லியம் புஷின் தந்தையார் மாண்டது போல் தனயனும் இரண்டாவது ஆட்சிக் காலத்தைக் கோட்டைவிடுவார் போன்றே தெரிகின்றது. அதற்கான சாத்தியப்பாடு படிப்படியாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஈராக் மீது போரை தொடக்கம் போதும், போரில் நெருக்கடி ஆரம்பிக்கும் போதும் ஈராக் அமெரிக்காவுக்கு இன்னொரு வியட்னாமாக மாறும் என்ற எதிர்வு கூறல்கள் நிலவியது. அது கணிசமாக நிறைவு பெற்றுவருகிறது.

அமெரிக்காவின் கௌரவம் உலக ஆதிக்க வல்லரசு என்ற முதன்மையின் தனித்துவம் அனைத்தும் உடைந்துவிட்டது. இது அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் கறைபடிந்த கதையாக மாறிவிட்டது. ஈராக்கிய கைதிகள் மீதான பாலியல் துன்புறுத்தலும், கொடுமையான இராணுவ நடத்தையும் முழு உலகத்திலும் அமெரிக்கா மீது அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. போராசிரியர் ஹன்ரிங்டன் குறிப்பிடுவதுபோல் புதிய உலக ஒழுங்குக்கு பின்னான உலக அரசியலின் முரண்பாடுகள் நாகரீங்களுக்கிடையிலான மோதலாகவே உள்ளது. அதிலும் தற்போதைய நகர்வுகள் இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான நடவடிக்கையாகவே விளங்குகிறது. இத்தகைய அமெரிக்க மயப்படுத்தல் பொதுமயப்படுத்தலாக அல்லது மேற்கு கலாசாரம், பொதுக் கலாசாரமாக எப்போது மாறுகின்றதோ அப்போதே உலகம் உடன்பாட்டை எட்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்க இராணுவத்தின் நடத்தைக்குப் பின்னால் வில்லியம் புஷ்சும் அவரது பாதுகாப்பு செயலாளரும் தலைமை தாங்கியுள்ளார் என்ற தகவல் மிக மோசமான இராணுவ அரசியலை அமெரிக்க வல்லாதிக்க சக்திகள் மேற்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. அவர்களது அனுமதியுடனேயே இராணுவம் ஈராக் கைதிகளை சித்திரவதைப்படுத்தியுள்ளது என்பது அவர்களது நடவடிக்கையில் எந்த மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. இது அமெரிக்க - வெள்ளைக்கார அரசியல் கலாசாரம் அவமானத்தின் சின்னமாக மாறிவிட்டதென்பதை உணர்த்துகின்ற விடயமாகவேயுள்ளது.

அமெரிக்காவின் ஜனநாயக ஆட்சியை விட ஈராக்கியரின் இராணுவ ஆட்சி ஈராக்கிய மக்களுக்கு பாதுகாப்பானதாகவே அமைந்திருக்கின்றது. ஈராக்கிய மக்களின் விடுதலைக்காக படையெடுத்த வில்லியம் புஷ் - தற்போது அவர்களை சர்வதேச விதிமுறைக்குட்பட்ட கைதிகளாகக்கூட பாரமரிக்க முடியாது போய்விட்டார். இது திட்டமிடப்பட்ட ஆக்கிரமிப்பின் வடிவமாகவே உள்ளது. இதனால் உலகம் குறிப்பாக - கீழைத் தேய அரசியல் தலைமைகளும் மக்களும் அதிக பாடங்களை கற்றுக் கொள்ளவேண்டும். ஈராக் படையெடுப்பைப் போன்று அமெரிக்கா இன்னோர் படையெடுப்பை சாத்தியப்படுத்த முடியாத உலக சூழலை உருவாக்க வேண்டும். மக்களை அரசியல் மயப்படுத்துவதுடன் மக்கள் எப்போது தேசியத்தின் மீதான பற்றுதலையும் விசுவாசத்தையும் கொண்டவர்களாக இருக்கின்ற சூழலை உருவாக்குதல் வேண்டும்.

அடிமைகளாகவும், ஏமாளிகளாகவும் துணை போகின்ற கூட்டமாகவும் மக்கள் இருக்கக் கூடாது என்பதற்கு ஈராக் அனுபவம் நல்ல உதாரணமாகும். ஆனால், இதில் ஈராக்கிய மக்கள் சளைக்கவில்லை. அதிலும் சதாம் ஹுசைன் வீழ்த்தப்பட்ட பின்னர் மிகத் தீவிரமாகவே செயல்பட்டு வருகின்றனர். இந்தப் போக்கில் ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக எல்லா தேசத்து மக்களும் கிளர்ந்தெழுவார்களாயின் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டுக்குள்ளேயே முடங்கவேண்டிய நிலை ஏற்படும்.

உலகத்தில் தேசியம், தேசியவாதம் போன்றவை எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டதாக கர்ச்சிக்கும் ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது. ஆனால் தேசியம் மீண்டும் ஊட்டி வளர்க்கப் படவேண்டிய ஓர் அம்சம் என்பதை தேசிய பற்றுதலையுடைய எந்த தனிமனிதனாலும் நிராகரித்துவிட முடியாது. சர்வதேசியத்தால் ஏற்படும் தேசிய பின்னடைவுகளை உடைத்தெறிந்துவிட்டு தேசியத்தைப் பாதுகாக்கும் சர்வதேசியத்துக்குள் நாம்இணைய முயற்சிப்போம். தேசியத்தை நிராகரித்த சர்வதேசியம் விலைமாதருக்கு ஒப்பான ஒன்றாகவே அமையும். அதுவே இன்று ஈராக்கிலும் நிகழ்ந்து வருகின்றது. சதாம் ஹுசைனும், மேற்காசிய ஆட்சியாளர்களும் சுயநலத்தைவிட முழுமையான தேசியத்திற்காக உழைத்திருப்பார்களாயின் ஈராக் மீதான படையெடுப்பை அமெரிக்கர்கள் நிகழ்த்த முடியாது போயிருக்கும்.

அமெரிக்காவின் திட்டமிட்ட கலசார ஆதிக்கம் கலாசாரத்தின் அணுகுமுறையினாலேயே அழிக்கப்படவேண்டும். இவ்வாறு மேற்குலகம் கீழைத்தேசத்தின் நாகரிகத்தை அழிக்குமாயின் கீழைத்தேசத்தின் தேசியம் தகர்ந்து போய்விடும். ஏற்கனவே செழிப்புமிக்க சிறந்த நாகரிகமெனக் கருதப்பட்ட கிரேக்க நாகரிகத்தை மேற்குலத்தவரே அழித்துவிட்டார்கள். அவ்வாறே சீனர்களின் மாவோயிஸசித்தாந்தத்தினால் சீன நாகரிகம் ஆட்டங்கண்டுவிட்டது. இதன் விளைவு சீனாவின் சரிவுடனேயே உலகத்திற்கு அம்பலமாகும். அதாவது சோஸலிஸமும் இன்றி, சீன நாகரிகமும் இன்றிய நிலையில் சீனாவின் அரசியல், பொருளாதார, இராணுவ இருப்பு



அரசியல் கட்டுப்பாட்டுத் தனத்தினால் பாதுகாக்கப்பட்டுவருகிறது. அத்தகைய மூடிய அரசியல் இருப்பும் தகருமாயின் கீழைத் தேசத்தில் வலு முற்றாக தகர்ந்து போய்விடும்.

எனவே அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஈராக்கில் சரியான பதிலடி கொடுப்பதே மாற்று வழியாகும். சித்திரவதை செய்யப்பட்ட கைதிகளை விடுதலை செய்வதும், ஜூன் மாதத்தில் ஆட்சி மாற்றத்தை ஈராக்கியரிடம் ஒப்படைப்பதாக அமெரிக்கர்கள் கூறுவதும், ஒரு கண் துடைப்பு அரசியல் நாடகமாகும். தம்மீது வீசப்பட்ட அசிங்கத்தை மறைப்பதற்கு போடும் திட்டங்களேயன்றி வேறு எதுவுமில்லை. இத்தகைய தந்திரத்தையும் ஈராக்கியர்கள் முறியடிக்க வேண்டும்.

ஈராக் நடவடிக்கையால் அரசியல் அவமானத்தையும், இராணுவ இழப்பீடுகளையும் எதிர்கொண்டிருக்கும் அமெரிக்கா முதலாம் தர வல்லரசுக்கான அந்தஸ்தையும் இழந்துவிட்டது. வல்லரசு என்பது ஆக்கிரமிப்பின் வடிவம் என்ற பாடத்தை அகற்றவேண்டிய சிந்தனை உலகத்தில் மீண்டும் பரவவேண்டும். அமெரிக்க ஆட்சி மாற்றம் எதனையும் புதிதாக ஏற்படுத்தாதுவிட்டாலும் ஆக்கிரமிப்பு வாதத்தை நிறுத்தவேண்டும். எப்படி சோவியத் யூனியன் தகர்ந்த போது சோவியத்தின் ஆக்கிரமிப்பு தகர்ந்ததோ அவ்வாறே அமெரிக்கா தகர்க்கப்படும் போதே ஆக்கிரமிப்பு கைவிடப் படும்.

அமெரிக்கா இராணுவ ஆதிக்கம் ஈராக்கில் நிகழ்த்தியது போன்று ஆசியாவின் பல பாகங்களிலும் நிகழ்த்திவருகிறது. குறிப்பாக இராணுவத்தின் பாலியல் துஷ்பிரயோகம் பிலிப்பைன்ஸ், ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளில் அன்றாடம் நிகழ்ந்து வருகின்றது. இந்த நாட்டு மக்கள் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராக பல தடவை போராட்டங்களை நிகழ்த்தியுள்ளனர். ஆனால், ஆட்சியாளரின் அடிப்படை உறவினால் அமெரிக்க இராணுவத்தினை முற்றாக அகற்றமுடியாதுள்ளது. ஆட்சியாளர்களுக்கிடையே இருக்கின்ற நலன் ஆக்கிரமிப்புக்கு அப்பால், ஒரு நெருக்கத்தினை வளர்த்துவருகிறது.

எனவே தேசியம் வலுவூட்டப்படவேண்டிய அச்சமாக மாறிவருகின்றது. தேசியத்தை கைவிடும். இனத்தை இலகுவாக எந்த சக்தியும் ஆக்கிரமித்துவிடும். அதனால், தேசியத்தை பாதுகாத்தும், தக்கவைத்தும் கொண்டு சர்வதேசயத்திற்கான உள்வாங்கலை நோக்குவோம். குருட்டுத்தனமான தேசிய பின்பற்றுகையை கைவிட்டு முன்மாதிரியான தேசியத்தை நேசிப்பதே பொருத்தப்படான அசம்சமாகும்.

செய்திக் கட்டுரை... - அஸ்மிதா

# நெருக்கடிகள் மத்தியில் இயங்கும் பருத்தித்துறை நகரப் பகுதி!

வடமராட்சியின் முக்கிய நகரமாக விளங்கும் பருத்தித்துறை நகரமும் அதன் பஸ் தரிப்பு நிலையமும் அதனை அண்மித்த பகுதிகளும் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக பயணிகள மற்றும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருகின்றனர்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் இந்தக் குறைபாடுகள் தீர்க்க முடியாமல் போயிருந்தாலும் சமாதானச் சூழல் ஏற்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இந்தக்குறைபாடுகளை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக கப்படாது குறித்து பொதுமக்கள் கவலை அடைந்துள்ளார்கள்.

தென் இலங்கையில் அருந்தும் பல்வேறு இடங்களிலும் இருந்து பெரும் தொகையான பயணிகள் பருத்தித்துறை நகர்ப்பகுதிக்கு வந்து செல்கின்றார்கள். இந்தப் பயணிகளுக்கான மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை வேதனைக்குரிய விடயமாகும்.



தற்பொழுது வாகனங்களின் தொகை அதிகரித்துள்ளது. ஆனால், நகரினை அண்மித்த வீதிகள் அகலமாக்கப்படவில்லை. இதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படும் சம்பவங்களும் உயிரிழப்புக்களும் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. குறிப்பாக பஸ்நிலையத்தின் தென் மேற்கு பக்கமாக உள்ள (பத்திரகாளி கோவில வீதி) ஓடக்கரை வீதி மிகவும் அகலம் குறைந்து காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. அண்மையில் அவ்வழியால் வந்த தனியார் பஸ் ஒன்றில் இருந்து கண்ணாடி வழியாக கழுத்து நீட்டிய சிறுமி ஒருத்தி மின் கம்பத்துடன் தலை அடிபட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டமையும் தெரிந்த விடயம்.

மேலும் இவ்வீதி வழியாக ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்க அளவு மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளில் சென்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பருத்தித்துறை பஸ் நிலையத்தின் வடக்குப்புறமாக அமைந்துள்ள முதலாம் குறுக்குத்தெருவின் அவலங்களை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. துறைமுகத்திற்கு வரும் கப்பல்களில் இருந்து பொருட்களை இறக்குவதற்கு இவ்வீதியினூடாகவே லொறிகள் செல்கின்றன. அதுமட்டுமல்லாமல் மீன்சந்தைக்கு செல்லும் பொதுமக்களும் இவ்வீதியையே பாவிக்க வேண்டியுள்ளது. அத்துடன் இவ்வீதியின் இரு மருங்கிலும் நடைபாதை வியாபாரிகளும் வியாபாரம் செய்கின்றார்கள். இப்படியான ஒரு இக்கட்டான நிலைமை இந்த வீதியில் காணப்படுகின்றது. இதற்குரிய மாற்று வழிகள் உடனடியாகச் செய்யவேண்டியது உரியவர்களின் கடமையாகும். பருத்தித்துறை பஸ்நிலையப்பகுதியின் வடமேற்கு முனையில் பொலிஸ் நிலையமும் இராணுவ முகாமும் அமைந்துள்ளது. இராணுவ கன்ரக வாகனங்களும் பஸ் நிலையத்தின் ஊடாகவே அடிக்கடி சென்றுவருகின்றது. வேகமாகச் செல்லும் வாகனங்களின் புகையும், தூசியும் பயணிகளையும் வர்த்தகர்களையும் வர்த்தக நிலையங்களையும் பாதிப்படையச் செய்கின்றன.

இதேவேளை பருத்தித்துறை பஸ்நிலையத்தில் இருந்த தெற்குப் புறமாக மந்திகை நோக்கிச் செல்லும் வீதியும் சனநடமாட்டம் அதிகரித்த பகுதியில் ஒடுக்கமாக காணப் படுகின்றது.

பஸ்நிலையத்தை நோக்குவோமாயின் பருத்தித்துறை சாலையில் இருபதிற்கு மேற்பட்ட அரச பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக அறிய முடிகின்றது. இங்கிருந்து யாழ்ப்பாணம், கொடிகாமம், மானிப்பாய், முகமாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு சேவைகள் நடாத்தப் பட்டு வருகின்றன. கடந்த இருவருடங்களுக்கு முன்னர் சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. இங்கேயே நேரங்கணிப்பாளர் கடமையிலீடுபடுகின்றார். இங்கு பேருந்து புறப்படும் நேர அட்டவணைகள் எதுவும் காணப படவில்லை. கடிகாரத்தையும் காண முடிவதில்லை. தொலைபேசி வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பயணிகள் பாதிக்கப்படுகின்றார்கள். பஸ் புறப்படும் நேர அட்டவணையும் கடிகாரமும் பஸ் நிலையத்தில் மிக முக்கியமாக இருக்கவேண்டும்.

பருத்தித்துறைச் சாலைக்கும் பஸ்தரிப்பு நிலையத்திற்கும் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் சீரான சேவையினை பொதுமக்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. மேலும் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த பஸ்நிலையம் சகல வசதிகளுடனும் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. உலக மயமாக்கல் நடைபெற்று வருகின்ற இந்தக் காலகட்டத்தில் அடிப்படை வசதிகளையாவது பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சி செய்யவேண்டியது முக்கியமானதாகும்.

மேலும் பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியின் பெரும்பகுதி தனியார் பஸ் தரிப்பிடமாகவும் லொறிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடங்களாகவும் காணப்படுகின்றன. அரச பேருந்து தங்குவதற்கு சிறிதளவு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த பஸ் நிலையம் அமைந்துள்ள பகுதியில் லொறிகள் தரித்து நிற்கின்ற இடத்தில் பாதுகாப்பு மிகவும் குறைந்த நிலையில் கிணறு ஒன்று காணப்படுகின்றது. நிலமட்டத்துடன் இந்தக் கிணறு காணபபடுவதால் கிணறு இருப்பது போன்ற தோற்றப்பாடு தெரியவில்லை. அண்மையில் அதிகாலையில் மூதாட்டி ஒருவர் பஸ்தரிப்பு நிலையத்திற்கு வந்து கொண்டிருக்கையில் இந்தக் கிணற்றில் தவறி வீழ்ந்து தெய்வாதினமாக உயிருடன் மீட்கப்பட்டார். எனவே இந்த பஸ்நிலையத்தின் இடநெருக்கடியை




சீர்செய்வதற்கு என்ற நடவடிக்கைகளான திட்டமிட்டு உரிய அதிகாரிகள் செயற்படவேண்டும் என பருத்தித்துறையின் நகர்ப்பகுதியுடன் அக்கறையுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.F. 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லலும் வல்லது அமைச்சு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பொறுப்பிலிருந்து விலகமுடியாது

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் வழங்கிவந்த உலர் உணவு நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டிருப்பதோடு - இப்போது நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையை பாதியளவாகக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

1985 இற்குப் பின்னர் - யாழ்.குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் இடப்பெயர்வுகளும், யுத்த அழிவுகளும் தொடர்கதைகளாகவே நீண்டுவந்தன.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படும் வரையில் - இத்தகைய அழிவுகளும், இடப்பெயர்வுகளும் இடம்பெற்றவண்ணமே இருந்தன.

நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் போரின் அச்சத்துக்கு ஆட்பட்டு இடப்பெயர்வுகளைச் சந்தித்தனர்.

யாழ்.குடாநாட்டிலும்கூட 1995/96 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் மனிதவரலாற்றில் மறக்கமுடியாத அனுபவங்களையும் அவலங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தன.

குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்தோரும், உயர்பாதுகாப்பு வலயங்களில் வீடுகளை, தொழில்களை இழந்து இடம்பெயர்ந்தோரும், வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றோரும் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் - தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்தோரில் குறிப்பிடத்தக்களவானோரும், வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றோரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

ஆனால், இடம்பெயர்ந்த மக்களுக்கோ, இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கோ, அரசாங்கம் நிரந்தரமான நிவாரணம் எதையும் கொடுக்கவோ - அவர்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவோ இல்லை.

ஏதோ பிச்சை போடுவது போல - மாதாந்தம் ஆகக்கூடியது 1260 ரூபாவை மட்டுமே கொடுத்துவிட்டால் சரி - இடம்பெயர்ந்த மக்கள் என்னபாடுபட்டாலும் அதைப்பற்றிக் கவலையில்லை என்ற நிலையில், அரசாங்கம் இதுவரை இருந்து வருகின்றது.

ஐந்து உறுப்பினர்களுக்கு மேலுள்ள குடும்பங்களுக்கு 1260 ரூபா நிவாரணம் எந்தளவுக்குப் போதுமானது என்பது பற்றியோ - அதை வைத்து அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துவார்கள் என்பது பற்றியோ மனிதாபிமான கண்ணோட்டத்துடன் எவரும் சிந்திக்கவில்லை.

இதுவரை இருந்துவந்த நிலை இப்படியென்றால் - இப்போது அதுகூட இல்லாமல் போகும் அவலம் ஏற்பட்டிருக்கிறது. யாழ். அரச அதிபருக்கு - அரசாங்கம் நிவாரண விநியோகத்துக்கான நிதியை வழங்காததால், கடந்த ஜனவரி மாதத்துக்குப் பின்னர் எவருக்கும் நிவாரணம் வழங்கப்படவில்லை.

ஜனவரி மாத நிவாரணமும்கூட மார்ச் மாதமே வழங்கப்பட்டது. அதன் பின்னர் அரசாங்கமோ, அதிகாரிகளோ நிவாரணம் குறித்து வாய்கூடத் திறக்கவில்லை.

இதனிடையே நிவாரணம் முற்றாக நிறுத்தப்படும் என்றும் - பாதியாகக் குறைக்கப்படும் என்றும் செய்திகள் வெளிவந்து இடம்பெயர்ந்த மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

புனர்வாழ்வு அமைச்சுப் பொறுப்பு முழுவதையும் ஜனாதிபதி சந்திரிகாவே வைத்திருக்கும் நிலையில் - குடாநாட்டு மக்களுக்கான நிவாரணத்திற்கு நிதி ஒதுக்கப்படாமை குடாநாட்டு மக்களை பெரிதும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

புலிகளுடன் பேசத் தயாராகும் சந்திரிகா -குடாநாட்டு மக்களின் அடிப்படை வாழ்வுரிமையைச் சிதைக்கும் வகையில் - நிவாரணத்தை நிறுத்த எத்தனிப்பது அவர் மீதான நல்லெண்ணத்தை முற்றாகச் சிதைப்பதாகவே அமைந்திருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு எந்த வாழ்க்கைப் பிடிமானத்துக்கும் வழிசெய்யப்படாத நிலையில், அவர்களை நிரந்தர இடத்தில் குடியேற்றவோ, தொழில்செய்யவோ அனுமதிக்கப்படாத நிலையில் - கொஞ்சமாகக் கிடைக்கும் நிவாரணத்தைக்கூட நிறுத்த முயற்சிப்பது எந்தவகையிலும் ஏற்கக்கூடியதொன்றாக இருக்கமுடியாது.

பல்வேறு தரப்புக்களில் இருந்தும் இந்த நிவாரண வெட்டுக்கு எதிர்ப்புக் கிளம்பினாலும், ஜனாதிபதியோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ மௌனமாக இருப்பது மக்களின் விசனத்தை அதிகரித்திருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிரந்தரக் குடியிருப்பு, தொழில்வாய்ப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கான பொறுப்பிலிருந்து அரசாங்கம் எந்தவகையிலும் விலகிவிட முடியாது.

அதுவரையில் இந்த மக்களுக்கு வழங்கிவந்த உலர் உணவு நிவாரணத்தையாவது வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசு தமது பொறுப்பிலிருந்து விலகிவிட முனைந்தால் - யாழ்ப்பாண மக்களின் கோபத்தையும் வயிற்றெரிச்சலையும் புதிய அரசாங்கம் வாரிக்கொட்டிக் கொள்வதைத் தடுக்கமுடியாது.

# நாடும் நடப்பும்




# ஜனாதிபதியின் நடவடிக்கைகள் ஜே.வி.பிக்கு அதிருப்தி தருகிறதாம்

## பிரதமரிடம் நேரில் முறையீடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்திருப்பதாக ஜே.வி.பி - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டிருக்கிறது. கடந்தவாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்த ஜே.வி.பியின் தலைவர்களே இந்த அதிருப்தியை வெளியிட்டனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் முக்கியத்துவம் வாய்ந்த கட்சியாக ஜே.வி.பி இருக்கின்றபோதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்முடன் எந்த ஆலோசனையையும் செய்யாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பியினர் குற்றஞ்சாட்டினர்.

அரசாங்கத்தின் பிரதான நடவடிக்கைகளின்போது ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டபோதும், ஜனாதிபதி சந்திரிகா அவ்வாறு செய்வதில்லை.

கடந்தவாரம் பிரதி சபாநாயகர் தெரிவுஇடம்பெற்றபோது, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொது இணக்கப்பாட்டுக்கு ஆளும் கட்சி வந்தது தொடர்பாக எந்தத் தகவலும் ஜே.வி.பிக்கு வழங்கப்படவில்லை. ஜனாதிபதியின் இந்தப்போக்குக் குறித்துத் தாம் விசனமடைந்துள்ளதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஜே.வி.பி கூறியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த குழுவில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீவிர கருத்துடன் இருந்தவர்களில் பிரதானமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச சிற்றூழியர் சங்கத்துடன் அமைச்சின் செயலாளர் சந்திப்பு

## இன்று நடைபெற ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கத்திற்கும், மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின் போது -

தொழிற்பயிற்சி நிலையத்தில் கடமையாற்றித் தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத் திகதியை முன்திகதியாக இடப்படவேண்டும், மாநகர சபைகள், நகரசபைகளில் கடமையாற்றும் ஊழியர்களின் பதவியுயர்வுகள், ஆட்சேர்ப்புத்திட்டம் தயாரித்தல் மற்றும் யாழ்.மாநகர சபையில் கடமையாற்றும் குடும்பநல உதவியாளர்களது விடயம், தொழிற்துறைத் திணைக்கள ஊழியர்களது நிரந்தர நியமனம், மின்சார பொறுப்பீடுகள் திணைக்கள ஊழியர்களது நிரந்தர நியமனங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் பி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மேற்படி விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால், இத்திணைக்களத் தலைவர்கள், இச்சந்திப்பில் கலந்துகொள்வதற்கு கோரியுள்ளதாகவும், இதுபற்றி உரிய பதில்கள் தங்களுக்கு இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# குடும்பநல உத்தியோகத்தர் தெரிவு; சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றுவதற்கான குடும்பநல உத்தியோகத்தர் தெரிவு நேர்முகப்பரீட்சை தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது. எனினும், இந்தப் பரீட்சைக்கு சமூகமளிப்போர் தமது மூன்று வருடத்திற்கான வாக்காளர் பதிவை தற்போதைய மாகாணசபை அமைக்கப்புட்டுள்ள காலகட்டத்தில் எந்தவொரு தேர்தல் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளமுடியாதென்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த விடயத்தில் உரிய பணிப்புரையை நேர்முகப் பரீட்சையை நடத்தும் அதிகாரிகளுக்கு வழங்குமாறு செல்வம் அடைக்கலநாதன் சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளார்.

# ஹெல உறுமயவின் — தாக்குதல்களிலிருந்து பாதுகாக்குமாறு சபாநாயகரிடம் தேரர் வேண்டுகோள்!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புஞ்ஞானந்த தேரர் - சபாநாயகர் லொக்கு பண்டாரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு தம்மீதும், தமது சகாவான ரத்தினசீக தேரர் மீதும் ஜாதிக ஹெல உறுமயவினால் தொடர்ந்தும் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் இவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இவை தொலைபேசி மூலமாக மட்டுமன்றி நாடாளுமன்றத்தில் வைத்தும் விடுக்கப்பட்டதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் தீவிரவாதப் போக்குக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரான புஞ்ஞானந்த தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவினால் கடத்திச்செல்லப்பட்டு கடுமையாக துன்புறுத்தப்பட்டதன் காரணமாகவே தனது சகாவான ரத்தினசீக தேரர் தனது நாடாளுமன்ற பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தாம் எவராலும் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் கத்தலுவே ரத்தினசீக தேரர் மீண்டும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். குடாநாட்டில் — பிரஜைகள் குழுக்களை ஆரம்பிக்கத் திட்டம்!

(கொழும்பு)

கொழும்பை தலைமையகமாகக்கொண்டு இயங்கும் பவ்ரல் எனப்படும் தேர்தல் கண்காணிப்பு நிலையம் - யாழ்ப்பாணத்தில் பிரஜைகள் குழுக்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் சமூகப்பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களைக் கையாளும் நோக்கிலேயே, இந்தப் பிரஜைகள் குழுக்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, கோபபாய் ஆகிய இடங்களிலேயே இந்த பிரஜைகள் குழுக்கள் நிறுவப்படவுள்ளதெனவும் பவ்ரல் அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## நாடகமும் அரங்கியலும் I — மாதிரி வினாத்தாள்

### பகுதி அ

பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1) நடிப்பில் "போலச் செய்தல்" என்னும் பண்பு காணப்படுகின்றது. (_____)
2) மரபுவழிக் கூத்தில் "படர்க்கைநிலை" பயன்படுத்தப்படுவதில்லை (_____)
3) நோ நாடகத்தின் பாலப்பாதை "கனாமிச்சி" ஆகும் (_____)
4) கிரேக்க பழைய மகிழ் நெறி நாடகவடிவம் "மிருகக்கோரஸ்" பயன்பாட்டினைக் கொண்டிருக்கும் . (_____)

சரியான விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

5) நாடகக் கலையின் பிரதான இலக்கு
   i) மக்களுக்கு மகிழ்வூட்டல்
   ii) அனுபவக்கையளிப்பு
   iii) பார்ப்போரை அழகியல் முறையில் உணர்திறனுடையவர்களாக்கல்
6) "நாடகம் உலக நடைமுறைகளின் போலச் செய்து காட்டல் ஆகும்" எனக் கூறியவர்.
   i) தொல்காப்பியர்
   ii) பரதர்
   iii) அரிஸ்டோட்டில்
7) "தாடி" வைத்து ஆடும் ஆண் பாத்திரங்கள் காணப்படும் "தேசி" நாடக மரபு
   i) கோலம்
   ii) யட்சகானா
   iii) கதகளி
8) இங்கு காணப்படும் நிலஉருத் தோற்றம் எந்த அரங்கிற்குரியது.
   i) ரோம்
   ii) பலே
   iii) படச்சட்ட மேடை



9) வறுமை அரங்கினை அறிமுகப்படுத்தியவர்
   i) குறோட்டவஸ்கி
   ii) சாமுவேல் பெக்கற்
   iii) பேற்றோல்ஸ் பிறெக்ற்
10) மேலைத்தேய அரங்கின் "முன்றின் ஒருமை நிலை" எனும் சிந்தனையை முன்வைத்தவர்
   i) அரிஸ்டோட்டில்
   ii) எமிழி சோழா
   iii) ஒகஸ்தாப் போல்

பொருந்தாக்குறிப்பைக் கண்டறிந்து அதன் இலக்கத்தை தரப்பட்டிருக்கும் கூட்டினுள் எழுதுக.

11) நாடக எழுத்துரு என்பது
   i) மேடைக்குறிப்புக்களையும் உரையாடல்களையும் கொண்டிருக்கும்
   ii) கட்புல வெளிப்பாட்டினை கருத்தில் கொண்டு ஆக்கப்பட்டிருக்கும்
   iii) இலக்கியமாகக் கணிக்கப்படும்
   iv) ஆற்றுகையினைத் திட்டமிட உதவி நிற்கும் ☐
12) i) காலக்கலை ii) ஆற்றுகைக்கலை
   iii) பிரதிமைக்கலை iv) கட்புல செவிப்புலக் கலை
   எனும் வரையறைக்குள் அரங்கினை நோக்க முடியும். ☐
13) i) விபாவம் ii) அனுபாவம்
   iii) வியபிச்சாரி பாவம் iv) சாத்துவிகபாவம் ☐
   என்பன உணர்வு வெளிப்பாட்டினைத தரும் பாவங்களாகும்.
14) i) புளோட்டஸ் ii) செனேக்கா
   iii) அரிஸ்ரோப்பன்ஸ் iv) மெனான்டர் ☐
   ஆகியோர் மகிழ்நெறி நாடக ஆசிரியர்களாவர்கள்

குறுவிடை தருக

15) கி.பி ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் தோற்றுவிக்கப்பட்ட அரங்கக் கொள்கைகள் பற்றிய இரு நூல்கள்.
16) சோபோக்கிளிஸ் எழுதிய 'திறஜெடி' நாடகங்கள் இரண்டு தருக.
17) வேடமுகம் போன்று ஒப்பனை மேற்கொள்ளப்படும் இரு அரங்குகள்.
18) வாய்மொழிச்சித்தரிப்பு இல்லாத இரண்டு ஆற்றுகைக்கலைகள்.
19) வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய இரு நாடகங்களின் பெயர்களைத் தருக.
20) ஆற்றுவோர் பார்வையாளர் தொடர்பில் பிரதான மாற்றங்களை ஏற்படுத்திய இருவரின் பெயரைத் தருக.

### பகுதி ஆ

1) "நாடகம் என்பது மோதுகைகளின் போலச் செய்தல் வடிவமே" இக்கூற்றினை உதாரணந் தந்து விளக்குக?
2) கிரேக்க திறெஜடி நாடகம் ஒன்றினைத் தெரிவு செய்து அதில் காணப்படும் திறஜெடியின் பண்புகளை ஆராய்க?
3) மத்திய காலத்தில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட முறைமையினை விளக்குக?
4) ஷேக்ஸ்பியர் அரங்கின் பண்புகளைத் தருக?
5) நாட்டிய சாஸ்திர அரங்கின் அழகியல் சிந்தனையான "ரச" எண்ணக்கருவுடன் அரிஸ்டோட்டில் எடுத்துக்கூறிய "கதாஸிஸ்" எண்ணக்கருவை ஒப்பிட்டு ஆராய்க?
6) "யதார்த்த அரங்கு" பற்றி விபரித்துஅதனைக் காவிய அரங்கு ஏன் மறுதலிக்கின்றது என்பதனை ஆராய்க?
7) "நோ" நாடகப் பண்புகளை விளக்குக?
8) பின்வருவனற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக
   i) யூகென் (Yugen)
   ii) நாடகக்கலை இலக்கியத்திலிருந்து வேறுபடும் முறை
   iii) பாதல் சர்க்கார்
   iv) ஃபோரம் அரங்கு (Forum Theatre)
   v) பீஜிங் ஒப்பேரா
   vi) அபிநயங்கள்
   vii) சங்கரதாஸ் சுவாமிகள்
   viii) புறோசீனியம் அரங்கு

P. கணேசராஜா B.A (Hons)
வருகை விரிவுரையாளர்
யாழ்ப்பாணக்கல்லூரி, வெளிவாரிப்பட்டப்படிப்புகள் பிரிவு

## புவியியல் III — மாதிரி வினாத்தாள்

(நேற்றைய தொடர்ச்சி.......)

### பகுதி II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடைதருக

1.) முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக

உலகக் குடித்தொகை மாற்றம் (1990, 2020)

| நாடுகள் | மில்லியன்களில் | | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| | 1990 | 2020 | 1990 - 2000 |
| உலகம | 5292 | 8062 | 1.4 |
| ஆபிரிக்கா | 648 | 1441 | 2.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 276 | 327 | 0.6 |
| லத்தீன் அமெரிக்கா | 448 | 719 | 1.6 |
| ஆசியா | 3108 | 4680 | 1.4 |
| ஐரோப்பா | 498 | 514 | 0.1 |
| சோவியத் கூட்டமைப்பு | 288 | 343 | 0.6 |

(Source: The World Social & Economics Statistics - )

2) 1990 க்கும் 2020 ஆண்டுக்கும் இடையில் உலகின் குடித்தொகை மாற்றத்தில் காணக்கூடிய மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.
3) ஆசியாக் கண்டத்தினதும் ஐரோப்பாக் கண்டத்தினதும் குடித்தொகை மாற்றத்துக்கான காரணங்களை இனங்கண்டு விபரிக்க.
4) இந்தியா அல்லது சீனாவில் குடித்தொகை மாற்றத்தினால் எழக்கூடிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளையும் விபரிக்க.

2) I) தரப்பட்ட உலகப்படத்தில் இன்று தேயிலை உற்பத்தி செய்யும் மிகமுக்கியமான மூன்று நாடுகளைக் குறித்து பெயரிடுக.
   II) கடந்த காலங்களில் இலங்கையின் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்குரிய மூன்று முக்கிய காரணங்களை ஆராய்க.
   III) இலங்கை அரசாங்கம் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொண்டுள்ள மூன்று நடவடிக்களை விபரிக்க.

3) I) தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் பெயர்ச்சியப் பயிர்ச்செய்கை நடைபெறும் நான்கு பிரதேசங்களை நிழற்றிப் பெயரிடுக.
   II) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையின் நான்கு முனைப்பான அம்சங்களை ஆராய்க.
   III) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்கினை ஆராய்க.

4) I) பத்துமில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட ஆசிய நகரங்கள் எட்டினைப் பெயரிடுக.
   II) உலகச் சனத்தொகை அதன் வளர்ச்சியிலும் பார்க்க விளைவாக நகரமயமாக்கப்பட்டு வருவதற்கான காரணங்களை விபரிக்க.
   III) நகர சனத்தொகை அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சினைகளை இலங்கையை சிறப்பு உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

5) I) இலங்கையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வலு மூலகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   II) வளர்முக நாடுகளில் சக்தி வளப் பயன்பாட்டில் எதிர்நோக்கப்படும் மூன்று பிரச்சினைகளை ஆராய்க.
   III) அபிவிருத்திக்கு அடிப்படையாக சக்தித்திறனை மேம்படுத்துவதற்குரிய மூன்று வழிமுறைகளை விபரிக்க.

6) I) உலக மீன்வளங்களின் இடம் சார் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிபபிடுக.
   II) அத்திலாந்திக் சமுத்திரத்தின் அல்லது பசுபிக் சமுத்திரத்தின் ஏதாவது ஒரு மீன்பிடித் தளத்தினைத் தெரிந்து அங்கு மீன்பிடித் தொழில் நிலைபெற உதவிய காரணிகளை ஆராய்க.
   III) உல்கில் இடைவெப்பப் பகுதியை விட அயனப் பகுதிக்கடல்களில் போதியளவு மீன்வளம் இருந்தும் அங்கு மீன்பிடித் தொழில் விருத்தியடையாமைக்குரிய காரணிகளை ஆராய்க.

7) I) ஐக்கிய இராச்சியபடத்தில் பிரதான இரும்புருக்குக் கைத்தொழில் நிலையங்கள் நான்கினைக் குறித்துப் பெயரிடுக.
   II) மேலே குறிப்பிட்ட நிலையங்களில் ஒன்றினைத் தெரிந்து அதன் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களை ஆராய்க.
   III) ஜப்பானில் அல்லது ஐக்கிய அமெரிக்காவின் இரும்புருக்குக் கைத்தொழில் தொடர்பாக அவதானிக்கக் கூடிய அண்மைக்காலப் போக்குகளை விபரிக்க.

8) I) இன்றைய தொடர்பாடல் விருத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொடர்பாடல் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   II) இன்றைய தகவல் தொழில்நுட்பமானது வர்த்தகத்தில் ஏற்படுத்தியுள்ள நன்மைகள் மூன்றினை விபரிக்க
   III) இன்றைய தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் நாடுகள்

செல்வி.ப.கந்தசாமி B.A. (Hons) Geo .spl.Dip-in-Edu
கொக்குவில் இந்துக் கல்லூரி

# காஷ்மீரில் கண்ணிவெடித் தாக்குதல்

# 33 இந்தியப் படையினர் ஸ்தலத்தில் பலி



இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பிரதேசத்தில் நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் 33 இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் 15 படையினர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறீநகரில் இருந்து 75 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்த லோவர் முண்டா என்ற பிரதேசத்தில் பஸ்ஸில் படையினர் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. நிலக் கண்ணிவவடித் தாக்குதலினால், பஸ் வெடித்துச் சிதறியதுடன் தீப்பற்றிக் கொண்டது.

இந்தத் தாக்குதலை காஷ்மீரின் முக்கிய பிரிவினைவாதக் குழுவான ஹிஸ்புல் முஜாகுதீன் மேற்கொண்டதாகக் தெரிவித்தது. தமது உயர் கட்டளை அதிகாரிகள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்குவதற்காகவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக அந்தக் குழு தெரிவித்தது.

தன்னியக்கக் கட்டுப்பாட்டுக் கருவி மூலம் நிலக்கண்ணிவெடியை வெடிக்கச் செய்ததாகவும், பஸ்ஸின் எரிபொருள் தாங்கி தீப்பிடித்துக் கொண்டதனால், படையினரின் உடல்கள் கருகியிருந்ததாகவும் தெரிவிக்கப படுகிறது.

காயப்பட்டவர்கள் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், இதனால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும், பி.பி.ஸியின் அல்ரப் சுசென் தெரிவித்தார்.

கண்ணிவெடியில் சிக்கி பஸ்வண்டி பலமான தாக்குதலுக்கு உட்பட்டிருந்ததால், அருகில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பஸ்ஸிலிருந்த மூவர் காயமடைந்தனர். இதனிடையே, நேற்று முன்தினம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் காஷ்மீர் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

## பலஸ்தீன புனர்நிர்மாணத்திற்கு அதிக நிதி தேவைப்படுகின்றது

### ஐ.நா. அதிகாரிகள் தெரிவிப்பு



காஸா நகரில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதல்களினால் வீடுகளை இழந்தவர்களின் புனர்நிர்மானப் பணிகளுக்கு அதிக அளவிலான நிதி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் உணவுக் கப்பலை ஆத்திரமடைந்த பலஸ்தீன மக்கள் சூழ்ந்துகொண்டதாகவும், ஐக்கிய நாடுகளின் அதிகாரி பீற்றர் ஹென்சன் காஸாவில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடச் சென்றபோது அவரது வாகனத்தின் கண்ணாடிகள் உடைத்து நொருக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காஸா நகரில் இருந்து இஸ்ரேலியப் படையினர் வெளியேறிய பின்பு இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

'ரபா' குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்கள் மிகுந்த ஆத்திர உணர்வுடன் காணப்படுகின்றனர். பாதைகள் போக்குவரத்து மேற்கொள்ளமுடியாதவாறு சிதைக்கப்பட்டுள்ளன. மிருகக் காட்சிச்சாலையொன்று உடைக்கப்பட்டதன் விளைவாக பல மிருகங்கள் இறந்ததாகவும், தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 200 பயணிகளுடன் சென்ற படகு பங்களாதேஷ் ஆற்றில் மூழ்கியது



பங்களாதேஷில் 200 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு ஆற்றில் மூழ்கியது.

தலைநகர் டாக்காவில் இருந்து 105 மைல்கள் தூரத்தில் அமைந்துள்ள மெக்னா நதியில் பயணம் மேற்கொண்ட இரண்டு அடுக்குகளைக் கொண்ட படகே நீரில் மூழ்கியது.

இந்த விபத்து நடந்ததன் பின்னர் இதுவரை 57 பயணிகள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், மற்றைய பயணிகள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் இதுவரை பெண்கள் குழந்தைகள் என எண்மரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பலத்த புயற்காற்றின் மத்தியில் படகு பிரயாணத்தை மேற்கொண்டிருந்ததால், இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த விபத்தின் போது நீச்சல் தெரிந்த 50 பயணிகள் நீந்திக் கரையேறியிருந்தனர்.

படகு மூழ்கத் தொடங்கிய நேரத்தில் அனேகமான பயணிகள் நித்திரையில் இருந்ததால், மூழ்கிய படகினுள் சிக்கியிருக்கலாம் என பொலிஸ் அதிகாரியான மொகமட் டுலால் மியா, ஏபி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

படகு கரைக்கு அண்மையில் மூழ்கியிருந்த வேளையிலும் கடல் கொந்தளிப்பின் காரணமாக பயணிகளைக் காப்பாற்ற இயலாது போய்விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற பகுதி இரு ஆறுகள் சந்திக்கும் இடமாக அமைந்திருந்ததால், நீர் அதிக சுழிகளைக் கொண்டிருந்தசாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிராமவாசிகள் மற்றும் மீனவர் பயணிகள் ஆகியோர் இயந்திரப் படகுகள் மூலம் பயணிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடம் இதே நதியில் ஏற்பட்ட படகு விபத்துக்களில் 700 பயணிகள் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனிக்குப் புதிய ஜனாதிபதி தேர்வு!

புதிய ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. ஜேர்மனிய ஜனாதிபதி மக்களின் வாக்குகளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பிரத்தியேகச் சட்டசபை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர் கோர்ஷட் கொலர், பல்கலைக் கழகப் பேராசிரியர் கெசென் சவான் ஆகியோர் ஜனாதிபதித் தேர்விற்கு போட்டியிடுகின்றனர். சவான் - ஜனாதிபதித் தேர்வுக்காகப் போட்டியிடும் முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

1200 அரசியல்வாதிகளையும், பொதுமக்களின் புகழ் பெற்றவர்களையும் கொண்ட குழுவொன்றினால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார். ஜேர்மனியில் ஜனாதிபதித் தேர்வு அரசின் மாற்றத்திற்கான சமிக்ஞையாகவும் கருதப்படுகிறது. இதனால், அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்வினை நன்கு அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கிற்கு அதிகாரங்கள் வழங்கிய பின்னர் கூட்டணிப் படைகளைத் தண்டிக்கக்கூடாது

## கூட்டணிப்படை நிர்வாகம் கோரிக்கை



ஆட்சி செய்யும் அதிகாரங்கள் ஈராக்கியர்களிடம் வழங்கப்பட்ட பின்னர், ஈராக்கில் கடமைபுரியும் கூட்டுப் படையினர் ஆளும் சபையால் தண்டிக்கப்படக்கூடாது என, கூட்டுப்படை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் இறைமையுடன் கூடிய ஆட்சி உருவாக்கப்பட்ட பின்பும் அங்கு கடமைபுரியும் அமெரிக்க, பிரித்தானியப் படையினர்- அவர்களது நாட்டுச் சட்டங்களுக்கு அமையவே தண்டிக்கப்படவேண்டும் என விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 30 இன் பின் கூட்டுப்படையினரின் நிலை தொடர்பாக கலந்தாலோசிக்கப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் புதிய பிரேரணைகள் அறிவிக்கப்படவில்லை. ஆனால், முன்னாள் பிரித்தானிய படையின் கூட்டளைத் தளபதியான கேணல் பொப் ஸ்ரிவிட் தெரிவித்த கருத்தில், இராணுவ சட்டங்கள் மூலமோ சர்வதேச சட்டங்கள்



மூலமோ பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் கூட்டுப் படையினருக்கு உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க அதிபர் புஷ்ஷின் செயற்பாடுகளை விமர்சித்த படம் முதலிடத்தைப் பெற்றுள்ளது!




(வாஷிங்ரன்)

பரன்கைட் 9 - 11 தலைப்பில் மைக்கல் மூரிஸினால் நெறிப்படுத்தப்பட்ட தகவல் படமொன்று 'பல்மி டி ஓர்' எனப்படும் பரிசினைப் பெற்றுள்ளது.

அமைதியான உலகம் என்ற தலைப்பில் 1956 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தகவல் படமொன்றின் வெற்றிக்குப் பின், மீண்டும் இந்தப் படம் முதற்பரிசினைப் பெற்றுள்ளது.

பரன்கைட் 9 - 11 என்ற தகவல் படம் ஈராக்கில் நடைபெறும் போரை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் புஷ்ஷையும், சவுதி அரேபியாவிலுள்ள உயர் குடும்பங்களையும், குறிப்பாகப் பின்லேடனையும் மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்ப் படம் சிலரைக் கேலி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் புஷ் ஒழுங்கற்ற முறையில் வெற்றி பெற்றிருந்ததாகவும், செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன் பயங்கரவாதம் தொடர்பாகக் கிடைத்த தகவல்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லையெனவும் இந்தப் படத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மைக்கல் மூரிஸினால் நெறிப்படுத்தப்பட்ட இந்தத் தகவல் படம் அமெரிக்க அரசின் செயற்பாடுகளை விமர்சித்துள்ளமையால், படத்தை உடன் வெளியிடமுடியாதிருந்தது. ஆனால், அமெரிக்காவின் 'வொஷிங்ரன் போஸ்ட்', ரைம் சஞ்சிகை ஆகியனவும் பிரித்தானியப் பத்திரிகைகளான 'இன்டிபென்டன்', 'ரெலிகிராப்' ஆகியனவும் இந்தப் படத்தைப் பாராட்டியிருந்தன.

# பாரிஸ் விமான நிலைய கூரை இடிந்து வீழ்ந்தது

## 6 பேர் பலி: மூவர் படுகாயம்

(பாரிஸ்)




பாரிஸில் சார்லஷ் டீ கலி விமான நிலையத்தின் கூரை இடிந்து விழுந்ததினால், 6 பேர் வரை கொல்லப்பட்டும் மூவர் காயமடைந்துமுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டிருந்த '2 E' எனப்படும் விமான நிலையத்தின் பகுதியின் கூரை இடிந்து விழுந்ததற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், கூரையில் வெடிப்புக்கள் காணப்பட்டதாக விமான நிலையப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கூரையின் இடிபாடுகளுக்கு மத்தியில் மக்கள் சிக்கியிருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல தொன் அளவிலான கொங்கிரீட்டும், கண்ணாடிகளும் நொருங்கி விழுந்துள்ளதாக தீயணைக்கும் படையின் பேச்சாளரான 'லொறெனர் விபேட்' தெரிவித்தார். அத்துடன் 30 மீற்றர் பரப்பளவில் இடிபாடுகளின் சிதைவுகள் சிதறிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலித்தேவன் பேர்லின் பயணம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் இன்று ஜேர்மன் தலைநகர் பேர்லினுக்கு செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

ஜேர்மன் வெளிநாட்டமைச்சும், அந்த நாட்டின் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து பெகோ நிறுவன அனுசரணையில் நடத்தும் விஷேட கருத்தரங்குகளில் இவர் பங்கேற்கவுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக எழுந்துள்ள தடைகளுக்கு தீர்வைக்காணும் வகையிலேயே இந்த கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## சகல இனமக்களுக்கும்

# சுயநிர்ணய உரிமை கிடைத்தாலே தேசிய ஒற்றுமை மலர முடியும்!

## வாசுதேவ கூறுகிறார்

நாட்டில் வாழும் சகல இனமக்களும் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே தேசிய ஒற்றுமை மலரும் என, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மலையக மக்கள் சமாதான சம்மேளனத்தின் சமாதான மாநாடு, நேற்று ஹற்றன் சதுக்க மேடையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சமாதானம் என்பது ஒவ்வொருவரது மனத்திலும் ஏற்படவேண்டும். நாட்டில் வாழும் சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் ஆகியோர் அவரவர் பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலை ஏற்படாதவரை இந்த நாட்டை சுயாட்சியின் கீழ் கொண்டுவரமுடியாது.

சகல இனமக்களும் ஒற்றுமையுடன் வாழ்வதுதான் ஜனநாயகம். யுத்தத்தை துறந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் சிறப்புற நடந்த 'விடுதலை' நூல் அறிமுக விழா



'விடுதலை' நூலின் சிறப்புப்பிரதியை வழங்குகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம். படம் - சசிகுமார்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியல் தத்துவம் மற்றும் பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய 'விடுதலை' அறிமுகவிழா நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான இந்த விழா - திருகோணமலை நகரசபை மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையில் நடைபெற்றது.

தேசியக்கொடியினை திருகோணமலை நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் ஏற்றிவைத்தார்.

பொது ஈகச்சுடரை திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர் ஒருவரின் தாயார் ஏற்றிவைத்தார். அடுத்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

விழாவின் வரவேற்புரையை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா நிகழ்த்தினார்.

சி.எழிலனின் தலைமையுரையைத் தொடர்ந்து நூல் அறிமுக உரையினை அ.யதீந்திராவும், வெளியீட்டு உரையினை தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

நூலின் முதற் பிரதியை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு வழங்கினார்.

சிறப்புப் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் வழங்கினார்.

நூலின் மதிப்பீட்டுரைகளை திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரர் இந்துக்கல்லூரியின் அதிபர் தண்டாயுதபாணி, சட்டத்தரணி கா.சிவபாலன் மற்றும் இ.தர்மராஜா ஆகியோர் ஆற்றினர்.

மண்டபம் நிறைந்த ஆர்வலர்களுடன் நிகழ்ந்த விழாவில் 'விடுதலை' நூல் வாங்குவதில் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்வம் காட்டியதைக் காணக்கூடியதாக இருந்தது.

திருமலை நகர், நிலாவெளி, கும்புறுப்பிட்டி, தம்பலகாமம், குச்சவெளி, கோபாலபுரம் போன்ற பகுதிகளில் இருந்தும், மூதூர் கிழக்கு, ஈச்சிலம்பற்று, சம்பூர், கிளிவெட்டி, சேனையூர் போன்ற பிரதேசங்களில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (10)

# புலிகளுடனான பேச்சுக்கள் ஓகஸ்டில் ஆரம்பமாகும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஓகஸ்ட் மாதம் அளவில் மேற்கொள்ளமுடியும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் செயலாளர் நாயகம் இம்தியாஸ் கலாமுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.

கொழும்பு - இசுறுபாயவில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கமும் சரி, விடுதலைப் புலிகளும் சரி சமாதானப் பேச்சுக்களில் இணைந்துசெயற்படும் மனப்பான்மையுடன் கலந்துகொள்ளவேணடும்.

இதனால், சமாதானப்பேச்சுக்கள துரிதமாக முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கிறோம்.

அதேவேளை, வடபகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்படுவதால் அந்தப் பகுதியில் அபிவிருத்திப்பணிகள் துரிதமாக முன்னேற்றமடையும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது - தெற்காசிய ஊடக அமைப்பின் செயலாளர் நாயகம் இந்தியாஸ் கலாம் இலங்கை சமாதான முயற்சிகள் வெற்றியைத்தரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# ஆயுதம் வைத்திருந்த இளைஞரை மட்டக்களப்பில் பொலிஸார் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆயுதம் வைத்திருந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தெய்வநாயகம் சுதர்சன் (வயது 24) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கைதுசெய்யப்பட்ட இவரிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய ரவைகள் ஐம்பதையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து இவரது வீடு முற்றுகையிடப்பட்டு அவர் கைது செய்யப்பட்டதுடன், இவரிடமிருந்த ஆயுதமும் மீட்கப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். இவர் இன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குறித்த சந்தேகநபர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து 3 வருடங்களின் முன் விலகியவரெனவும் எனவே இவர் கருணா அணியைச் சேர்ந்தவராக இருக்கக்கூடுமெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பொத்துவில் கடற்பரப்பில் இந்திய கப்பல் நங்கூரம்!

## இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

# சமாதான முயற்சியில்...

பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இந்திய கப்பல் நங்கூரம்!

அம்பாறை - பொத்துவில் கடற் பரப்பில் இந்திய வர்த்தகக் கப்பலொன்று இயந்திரக் கோளாறு காரணமாக நங்கூரமிடப்பட்டிருப்பதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் கரையிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் நங்கூரமிட்டுள்ளது. இந்தக் கப்பலில் சீமெந்து ஏற்றிவரப்பட்டதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பழுதடைந்த இயந்திரத்தைத் திருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், இந்தக் கப்பல் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

# பேச்சுக்கான...

தரப்பிற்கு அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவினால் சமாதான செயலகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஐ.நாவிற்கான முன்னாள் இராஜதந்திரி ஜெயந்த தனபால தலைமை தாங்குவார் என கொழும்புச் செய்தியொன்று தெரிவித்தது.

அத்துடன், நோர்வே நாடே சமாதானப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்தும் அனுசரணையாளராக இருக்குமெனவும், விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலேயே மீளப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# இலங்கை மீனவர்களுடன்...

கத் தெரிவிக்கப்படுகிறது.

ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், புதுக்கோட்டை, ஜெகதாப்பட்டினம், நாகபட்டினம் முதலிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே நேற்று வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்திய, இலங்கை மீனவர்களுக்கிடையிலான சந்திப்பில் - இந்திய, இலங்கை தூதரக அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்தின் மீனவர் சங்க சமாசங்களைச் சேர்ந்த 10 பிரதிநிதிகள் மற்றும் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கொழும்புக்குச் செல்லவுள்ளனர்.

இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையைச் சேர்ந்த கலாநிதி சூசை ஆனந்தனும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு பிரதேசத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

இவர் விடுமுறையில் வீடு வந்த போது இடம்பெற்ற தனிப்பட்ட குரோத பிரச்சினையின் போதே கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றபோதும், வேறுகாரணங்கள் இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

(01)

# வெடிபொருட்கள் கடத்திய இருவர் கைதுசெய்யப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து திருகோணமலை - கிண்ணியாவுக்கு பெருமளவு ஜெலிக்னைட் குச்சிகளை கடத்திச் சென்ற இருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மொரட்டுவ கட்டுப்பெத்த என்ற இடத்தில் இடம்பெற்றது.

பிளாஸ்டிக் பொருட்களைக் கொண்டுசென்ற லொறி ஒன்றிலேயே இவை மறைத்து எடுத்துச் செல்லப்பட்டன. எனினும் இவை எடுத்து செல்லப்பட்டமைக்கான காரணம் எவையும் இதுவரை வெளியாகவில்லை.

(01)

# சமாதான முயற்சியில்...

பேச்சுக்களில் ஏற்பாட்டாளராகக் கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தலாம் என ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் - இவ்வாறான நிலைப்பாட்டின் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளைக் கவரமுடியும் என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பாக நேரடிப்பேச்சுக்களை நடத்துவதற்கு, நேரம் ஒதுக்கித்தருமாறு ஜே.வி.பி ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்ததாகவும் -

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இதற்கு உரிய பதிலை வழங்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

(01)

# இலங்கைக்...

டூன்களும், கடற்படை மற்றும் விமானப் படையிலிருந்து தலா ஒவ்வொரு பிளட்டூன்களும் பங்கேற்கவிருக்கின்றன.

கடந்த 2002 ஆம் ஆண்டு அமெரிக்கப் படையினரின் எம்.பி.ஈ பயிற்சி பங்களாதேஷில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.




Career.Com

தொழில்சார் கற்கைநெறிகளின் முன்னோடிகள்

aat, CAT and CMA

100% Free for A/L 2004 Batch (Only for 75 Students)

விரிவுரைகள் ஆரம்பம்: 02.06.2004

Note: மாணவர்கள் O/L சான்றுகள் A/L 2004 பரீட்சை எழுதியமைக்கான சான்றுதல்கள் கொண்டு வருதல் வேண்டும்.

79 Main Street Jaffna.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.